DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தலங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி

Towards 25th Year in Publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

உதயம் 1268 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday July 24, 2020



## உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 15,778,807 ஆக உயர்ந்தது...

**உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 639,081 ஆக அதிகரித்துள்ளது...**

**இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லையாம்...**

**அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு: 149,249**

**பிரேசில்:- 85,285 இந்தியா:- 31,027 கனடா:- 8,839**

## Toronto City council will decide, what to do with the vacant seat left by former Councillor Jim Karygiannis

## கனடியத் தமிழர்களின் 'நண்பன்' என்று அழைக்கப்பெற்ற கவுன்சிலர் ஜிம் கரிஜியானிஸின் இடம் இன்னும் நிரப்பப்படாமலேயே உள்ளது



கனடியத் தமிழர்களின் "நண்பர்" என்றும் பல்லின மக்களின் காவலன் என்றும் அழைக்கப்பெற்ற ரொரன்ரோ மாநகர சபையின் கவுன்சிலர் ஜிம் கரிஜியானிஸின் ஸ்காபுறோ-அஜின்கோர்ட் வட்டாரத்தின் வெற்றிடம் இன்னும் நிரப்பப்படாமலேயே உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த உள்ளாட்சித் தேர்தல் காலத்தில் ஒரு வேட்பாளர் செலவு செய்யக்கூடிய தொகையிலும் பார்க்க அதிகமாக செலவுகளைச் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தனது பதவியை இழந்த ஜிம் கரிஜியானிஸ் அவர்கள் ஒன்றாரியோ மாகாணத்தின் உயர்நீதி மன்றத்தில் தனக்கு வழங்கப்பெற்ற தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பெற்று பின்னர் சில நாட்களில் மீண்டும் மாநகர சபையின் கவுன்சிலராகப் பதவியேற்றுக் கொண்டார். எனினும் ரொரன்ரோ மாநகர வாசியான அடம் என்பவர் தாக்கல் செய்ய மற்றுமொரு வழக்கில் அவருடைய குற்றம் உறுதி செய்யப்பெற்று மீண்டும் யூலை மாத ஆரம்பத்தில் மீண்டும் பதவியை இழக்க நேரிட்டது.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கூடவுள்ள ரொரன்ரோ மாநகர சபை தனது கூட்டத்தில் மீண்டும் தேர்தலை நடத்தி ஒரு கவுன்சிலரை தெரிவு செய்வதா அன்றி, இன்னொருவரை தேர்தல் இல்லாமல் நியமனம் செய்வதாக என்று முடிவு செய்யவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் தனக்கு எதிராக சுமத்தப்பட்ட இரண்டாவது வழக்கில் வழங்கப்பெற்ற தீர்ப்பு நீதியற்றது என கனடாவின் உயர் நீதி மன்றமான சுப்பிரிம் நீதி மன்றத்தில் அப்பீல் செய்யவுள்ளதாகத் தெரிவித்த ஜிம் கரிஜியானிஸ் அவர்களது வாதம் வெற்றி பெறுமா என்பதை நாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்

ஜிம் கரிஜியானிஸ் அவர்கள் முன்னர் மத்திய பாராளுமன்றத்தின் லிபரல் கட்சி உறுப்பினராக சுமார் 25 ஆண்டுகள் பணியாற்றிய காலத்தில் தனது தொகுதியில் வசிக்காத பலருக்கும் குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கும் பல சிரமங்களுக்கிடையில் சேவையாற்றி பின்னர் கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் தனது சேவையை அனைவருக்குமாக வழங்கி வந்தார் என்பதும் இதனாலேயே அவரை "தமிழர்களின் நண்பன்" என்று அனைவரும் அழைத்து வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000 Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY RENOVATION
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.64% | | $1,553.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,553.00 |



mortgageSolutions.ca

Kiruba Thanabalasingham
Mortgage Agent Lic#M12002440

Cell: 416.894.9122
Fax: 647.317.1511

info@mortgageSolutions.ca
Ultimate Mortgage Group. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.894.9122

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

CLEANING HELP WANTED

வேலை வாய்ப்பு

Newmarket, Richmond Hill, Scarborough, மற்றும் Toronto ஆகிய இடங்களில் Cleaning செய்வதற்கு வேலையாட்கள் உடனடியாக தேவைப்படுகிறார்கள். தொலைபேசி மூலமாகவோ அல்லது Text மூலமாகவோ தொடர்புகொள்ளலாம்.

437-774-1534

தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை

ஸ்காபுறோ நகரில
Bellamy / Progress
சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள Doors & Windows தொழிற்சாலைக்கு மர வேலை மற்றும் Spray Paint செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.

Call:
(416) 875-4119

HOUSE FOR SALE

Pickering நகரில்
401 பெருந்தெருவிற்கு அருகில் உள்ள அழகிய வீடு விற்பனைக்கு உள்ளது.
(3+2) 5 rooms & separate entrance basement விற்பனைக்கு உண்டு.
55' x 180' அளவுள்ள காணி.
அத்துடன் வீட்டின் திருத்த வேலைகள் அனைத்தும் அண்மையில் பூரணமாகச் செய்யப்பட்டன.

Call:
(416) 825-9425

SPOKEN ENGLISH

100% உத்தரவாதம்!
ஆங்கிலம் எதுவும் கதைக்கமுடியாதவர்கள் 2 மாதத்தில் சரளமாக பேச முடியும்
Letter writing, Essay writing, Citizenship exam preparation மற்றும் IELTS preparation.
நம்பிக்கையுடன் அழையுங்கள்

துஸ்யந்தி:
(647) 606-1009

HAIR SALON FOR SALE

Brimley / Eglinton

Sale: - Equipment
- Tools
- Supplies
- Client List

21+Years in business.
650+ Regular Clients, Plus Walk-Ins

Call: (416) 768-8673
Email:
Kumari_Madu@hotmail.com

# கறுப்பு யூலைப் படுகொலைகள் நினைவு நாளில் எமது கண் இமைகள் நன்கு விரியட்டும்

எமது இனம் மற்றும் மொழி ஆகியன எமது அடையாளமாக இருந்து எமக்கு பாதுகாப்பையும் பெருமையையும் தரும் என்று எண்ணியிருந்த போதெல்லாம் இதயத்தை துளைத்து போன்ற பல கொடுமைகள் இதுவரை அரங்கேறியுள்ளன. அவையெல்லாமே, எமது அடையாளங்கள் என்று எண்ணியிருந்த இந்த இரண்டின் அடிப்படையிலேயே நடத்தப் பெற்றன என்பதை பார்க்கின்றபோது நாம் அனுபவித்த அந்த கொடுமைகளிலிருந்து எவ்வாறு வெளியேறுவது என்ற சிந்தனையை ஆயுதம் ஏந்திப் போராடிய தியாக உள்ளங்களில் மேலும் தீவிரமாக வலுப்பெற்றது.

ஆமாம், கொடிதான "கறுப்பு யூலை" நாளை சாதாரணமாக நினைவு கூர்ந்து விட்டு ஓய்ந்து விட முடியாது. இந்த வருடத்தின் நினைவு நாள் எம்மவர்களின் சிந்தனைகளில் சில மாற்றங்களையாவது கொண்டுவர வேண்டும் என்பதே இவ்வாரக் கதிரோட்டத்தின் அடித்தளமாக தோன்றுகின்றது.

யூலைப் படுகொலை தொடக்கம் முள்ளிவாய்க்கால் படுகொலைகள் வரையும் எத்தனை இலட்சம் உயிர்களை நாம் இழந்திருப்போம். அவர்களில் போராளிகள், பொதுமக்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், சமூக அக்கறை கொண்டவர்கள், அன்னையர்கள், தந்தையர்கள், ஆசிரியப் பெருந்தகைகள், கல்விமான்கள் விவசாயிகள் என்று பல பிரிவினர் நாம் முன்னர் சொல்லியது போன்று எமது இனம் மற்றும் மொழி ஆகிய எமது அடையாளங்களின் அடிப்படையிலேயே இன்று எங்கள் மத்தியில் இல்லாமல் அழிக்கப்பட்டுள்ளார்கள்.

கறுப்பு யூலை படுகொலைகளுக்கு உள்ளாகி தங்கள் உயிர்களை அர்ப்பணித்தவர்கள் எவ்வளவு கொடிய முறையில் சித்திரவதைகளை அனுபவித்தார்கள் என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அன்று தொடக்கம் போராடியும் வெற்றியீட்டியும் போராளிகளையும் பொதுமக்களையும் இழந்தும் கடந்த வந்த பாதையில் இறுதியில் முள்ளிவாய்க்கால் என்னும் முற்றத்தில் எண்ணில் அடங்காத வதைகளுக்கு உள்ளாகி வாடி நின்றோம்.

அந்த கொடிதான நாட்களும் கடந்து மேலும் 11 வருடங்கள் வேதனைகளோடு கடந்து சென்றன. எமாற்றங்கள், துரோகங்கள் என எமக்கு முன்பாக இடம்பெற்றாலும் அனைத்தையும் மௌனமாகவே கடந்து வந்துள்ளோம்.

இந்த வருடத்தில் யூலைப் படுகொலைகளின் நினைவு நாள் இன்று எங்கள் முன்பாக வந்து கண்ணீர் சொரிகின்றது.

நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். நாம் செய்ய வேண்டியது 37 வருடங்களுக்கு முன்பாக கொரூரமான முறையில் கொல்லப்பட்டவர்களின் முகங்கள் எம் முன்னே கொண்டு வந்து, அவர்களுக்காக தீபங்களை மட்டும் ஏற்றிவிட்டுப் போவதா?

இல்லை. நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள், பணிகள் ஆகியன பல முடங்கிக் கிடக்கின்றன. குறிப்பாக புலம் பெயர் நாடுகளில் மௌனம் ஊசலாடுகின்றது. ஆனாலும், இன்று யூலை 24ம் திகதி வெள்ளிக்கிழமை. நாம் இந்த கதிரோட்டத்தை பதிவுசெய்து கொண்டிருக்கும் கனடா என்னும் பல்லினங்களை மதிக்கும் ஒரு மண்ணில் எம்மில் பலர் விழித்திருக்கின்றோம். அதற்கு மேலாக இந்த தேசத்தில் இரண்டு முக்கியமான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்பதையும் அனைவரோடும் பகிர்ந்துகொள்வதில் உற்சாகமடைகின்றோம்.

எமது தாயக மண்ணின் முன்னாள் மாகாண முதல்வர், எமது இனத்திற்காக தனது முதிர்ந்த வயதிலும் முழங்கால் நோ எடுக்க, மக்களைச் சந்தித்து தேர்தல் வாக்குகள் "பிழையானவர்களுக்கு" சென்றுவிடக் கூடாது என்பதற்காக போட்டியிடுகின்ற நீதியரசர் விக்கினேஸ்வரன் ஐயா அவர்களோடு கனடா வாழ் ஆர்வலர்கள் இணையவழியாக உரையாடுகின்ற சந்தர்ப்பம் அவருக்கும் எமக்கும் கிட்டியுள்ளது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் தலைமையும் பிரதிநிதித்துவமும் அவரைப் போன்றவர்களின் கைகளுக்கு கிட்ட வேண்டும் என்ற அவாக் கொண்டவர்கள் அவரோடு தங்கள் மணித்துளிகளை செலவிடவுள்ளார்கள். இது பயனுள்ள நிகழ்வாகும். மற்றுமொரு இணையவழி கலந்துரையாடல் எமது கனடிய மண்ணிலிருந்து தமிழ் உலகை இணைக்கப்போகின்றது. கடந்த வாரம் தமது முதலாவது இணையவழி கலந்துரையாடலை நல்லதோர் தலைப்பில் ஆரம்பித்து இன்று மாலை இரண்டாவது தடவையாக இணையப் போகின்றனர் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அன்பர்கள். இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ள அமைப்பு "கனடியத் தமிழர்களின் குரல்" (Voice of CanadianTamils) என்பதாகும்.

எமது கடந்த வாரக் கதிரோட்டத்தில் இந்த அமைப்பு நடத்திய முதலாவது இணையவழி கலந்துரையாடல் பற்றி மிகுந்த அக்கறையோடு குறிப்பிட்ட நாம், இந்த வாரமும் இன்று மாலை அந்த "கனடியத் தமிழர்களின் குரல்" அமைப்பு நடத்துகின்ற கலந்துரையாடல் பற்றி குறிப்பிட வேண்டிய கட்டாயம் உள்ளது.

கட்டாயத்திலும் பார்க்க கறுப்பு யூலை நினைவு நிகழ்வோடு தொடர்பான விடயங்களைப் பற்றி இன்று மாலை அவர்கள் உரையாடப் போகின்றார்கள் என்பதும் முக்கியத்துவம் பெறுகின்றது

இன்று மாலை "கனடியத் தமிழர்களின் குரல்" நடத்துகின்ற இணையவழி கலந்துரையாடல் தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட சில காத்திரமான விடயங்கள் எமது பார்வைக்குக் கிட்டியிருந்தன.

கறுப்பு யூலை போன்ற போன்ற நாம் நினைவு கொள்ள விடயங்களுக்கு இணையாக நாம் எத்தனையோ விடயங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளதை நாம் வலுப்படுத்தவே விரும்புகின்றோம்

கீழே காணப்படும் விடயங்கள் அந்த அமைப்பினால் மிகவும் தெளிவோடும் நிதானத்தோடும் எமது மக்களுக்காக கீழ்வரும் அந்த அமைப்பு முன்வைத்துள்ளது.

***முள்ளிவாய்க்காலில் ஆயுத மௌனிப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை கிட்டத்தட்ட 11 வருடங்களாக, பல புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் அரசியல்வாதிகள், அரசியல் அமைப்புகள், தனிநபர்கள், குழுக்கள் மற்றும் சில சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஆகியவை, ஸ்ரீலங்கா பேரினவாத பௌத்தஅரசுகளினால் அரங்கேற்றப்பட்ட தமிழினப்படுகொலை. போர்க்குற்றம் ,காணாமல் ஆக்கப்பட்டோர், தமிழினத்திற்கு எதிரான மனித உரிமைமீறல்கள், தமிழர்களின் பூர்வீக நிலங்களில் அத்துமீறிய சிங்களகுடியேற்றங்கள் மற்றும் இப்போது புதிதாக ஸ்ரீலங்கா பேரினவாதபௌத்தர்களால் வெளிப்படையாப் பேசப்பட்டு வரும் பண்டைத் தமிழர்களின் மதம் மற்றும் இனம் சார்ந்த வரலாற்றுத் தளங்கள் மற்றும் சான்றுகள் அழிப்பு போன்றவற்றிற்க்கு சர்வதேச சமூகத்திடம் நீதி கேட்டு போராடி வருகின்றோம்.***

***ஆனால் ஈழத்தமிழர்களாகிய எமக்கு எந்தவொரு நீதியும் கிடைக்கவில்லை என்பது நாம் யாவரும் அறிந்த உண்மையாகும்.***

***இன்று ஈழத்தமிழர்களாகிய நாம் உரிமை, உடமை மற்றும் சுதந்திரம் ஆகிய அடிப்படையான அம்சங்களை இழந்து எமது இனத்திடம் எஞ்சியிருந்த தமிழர் அடையாளம் மற்றும் உணர்வுகளையும் அழித்து ஶ்ரீலங்காவிலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் ஈழத்தமிழர்களின் அடையாளத்துக்கும், இனஉணர்விற்கும் முடிவுக்கட்டும் செயல்களை ஶ்ரீலங்காபௌத்த இனவாத அரசும் பௌத்த இனவாத அமைப்புகளும் வெற்றிகரமாகவும், தந்திரமாகவும் நிறைவேற்றி வருவதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம்.***

***ஆகையினால் இனிமேலும் நாம் தாமதப்படுத்தாமல், நிதானமான முறையில் பின்வரும் விடயங்களில் தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும்.***

***அவையாவன:-***

1. ***இனப்படுகொலைக்கான நீதி***
2. ***காணாமல் ஆக்கப்பட்டோர்க்கான நீதி***
3. ***ஶ்ரீலங்கா அரசின், மனித உரிமை மீறல்களுக்கான நீதி***
4. ***தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நீதி***
5. ***வடக்கு, கிழக்கில்அத்துமீறியசிங்களகுடியேற்றத்திற்கான நீதி***
6. ***திட்டமிட்டவகையில் தமிழர் வரலாற்றுத் தடையங்கள் அழிப்பிற்கு எதிரான நீதி***

***சுருக்கமாக சொன்னால் எமது இனத்தின் நலன் சார்ந்த விடயங்களில் ஒருமித்து எம்மினமக்களுக்கான தெளிவூட்டல் மற்றும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் புனிதமான செயலில் செயல்பட அனைவரையும் நிபந்தனையின்றி இணையுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்'***

என்று அந்த "கனடியத் தமிழர்களின் குரல்" அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளதை எமது கனடா உதயன் வரவேற்று அதனை வலுப்படுத்தும் எண்ணத்தோடு கரங்கோர்த்து நிற்கின்றது.

எனவே, இந்த யூலைப் படுகொலை நினைவு நாளில் எமக்கு முன்பாக உள்ள மேற்சொல்லப்பட்ட ஏனைய விடயங்களையும் மிகுந்த அக்கறையோடு கவனத்தில் எடுத்து செயற்படுத்த வேண்டும் என்றும் அனைவரையும் வேண்டுகின்றோம்.

# யாழ் பல்கலைக்கழகத்தில் கறுப்பு ஜூலை படுகொலைகள் நினைவேந்தல் நிகழ்வுகள்




கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு, யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில், பல்கலைக்கழக வளாகத்தில், நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது படுகொலையானவர்களின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேவேளை, வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் கறுப்பு ஜூலை நினைவேந்தல், இன்று காலை அனுட்டிக்கப்பட்டது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை வளாகத்தில் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில், சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஒன்றுகூடினர்.

அஞ்சலி செலுத்துவதற்கான பொது ஈகைச்சுடர் தவிசாளரினால் ஏற்றப்பட்டதுடன், பிரதேச சபையின் உறுப்பினர்கள் கைகளில் மெழுவர்த்தியை ஏந்தியவாறு அஞ்சலித்தனர்.

தொடர்ந்து இனியொரு கறுப்பு ஜூலை வேண்டாம், இனவாதம் அரச இயந்திரம் முதல் சிவில் சமூகங்கள் வரையில் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்ற தொனிப்பொருளில் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உரைகள் இடம்பெற்றது.

# இலங்கை அரசின் சிறையிலிருந்து "பஞ்ச நடையில் தனியாவர்த்தனம்" நூலை எழுதிய முன்னாள் போராளி கண்ணதாஸன் விடுதலையானார்!



யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை விரிவுரையாளரும் முன்னாள் போராளியுமான நல்லை கண்ணதாஸ் கொழும்புமேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் இன்று புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிற்காக இளைஞர் ஒருவரை கட்டாய ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் வவுனியா நீதிமன்றினால் கண்ணதாசனுக்கு ஆயுள் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட மேன் முறையீட்டு மனு மீதான விசாரணை இடம்பெற்று வந்திருந்தது.

இந்நிலையில் சற்று முன்னர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் அவர் மீதான குற்றச்சாட்டுக்கு போதிய சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து நீதிமன்று அவரை விடுதலை செய்துள்ளது.

3 ஆண்டுகளாக மேல் முறையீட்டு நீதிமன்றில் குறித்த வழக்குத் தொடர்பிலான விசாரணைகள் நடைபெற்றுவந்திருந்த நிலையில் நீதிமன்று அவரை விடுதலை செய்துள்ளது மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சிறைத்தண்டனை அனுபவித்த அவர் மிருதங்கக் கலையின் நுணுக்கங்கள் குறித்த "பஞ்ச நடையில் தனியாவர்த்தனம்" என்ற நூலை சிறையிலிருந்தே எழுதி அதனை அவருடைய குடும்பத்தார் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# எதிர்காலத்தில் கோடை கால வெப்ப அதிகரிப்பால் மக்களது உடலுறுப்புகள் செயலிழக்கும் அபாயம்



பூமியில் அவ்வப்போது ஏற்படும் பருவநிலை மாற்றம் காரணமாக வழமைக்கு மாறான கால நிலையும் இயற்கை அழிவுகளும் வெள்ளப்பெருக்கு போன்றவையும் ஏற்படுகின்றன. இதைப்போலவே அதிகரிக்கும் வெப்பம் காரணமாக, எதிர்காலத்தில் கோடை காலங்கள் மிகவும் கடுமையாக மாறினால் உலகம் முழுவதுமுள்ள இலட்சக்கணக்கான மக்கள் வெப்ப அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு அதனால் அவர்களது உடலுறுப்புகள் செயலிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றார்கள்.

வெப்ப அழுத்தத்தால் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படக் காரணமாகும் வேலைகளை பெரும்பாலும் வளரும் நாடுகளை சேர்ந்தவர்கள் மேற்கொள்கிறார்கள். அதாவது, வெட்டவெளியில் விவசாயம் செய்வது, கட்டடப் பணிகளில் ஈடுபடுவது அல்லது தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் அவர்கள் ஆபத்தான சூழ்நிலையில் பணியாற்றி வருகிறார்கள்.

இதற்கிடையில், பருவநிலை மாற்றத்தின் காரணமாக எதிர்காலத்தில் கோடை காலங்கள் என்பது மனிதர்கள் பணியாற்றுவதற்கு ஊறு விளைவிக்கும் அளவுக்கு அதிக வெப்பநிலை கொண்டதாக மாறக் கூடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உடல் தன்னைத்தானே குளிர்விக்க முடியாமல், வெப்பநிலை அபாயகரமான அளவுக்கு தொடர்ந்து அதிகரித்து அதனால் உடலுறுப்புகள் செயலிழப்பது வெப்ப அழுத்தத்தின் விளைவு ஆகும்.

உடலிலுள்ள தேவைக்கு அதிகமான வெப்பம் வெளியேறுவதற்கான முக்கிய வழி தோலிலுள்ள வியர்வை ஆவியாவதுதான். ஆனால், வெளிப்புற காற்று ஈரப்பதத்துடன் இருந்தால் இந்த செயல்முறை முற்றிலும் பாதிக்கப்படும்.உதாரணமாக, தற்போது கொரோனா வைரஸ் நோய்த்தொற்று சிகிச்சையில் ஈடுபட்டுள்ள சுகாதார பணியாளர்கள் அணியும் பாதுகாப்பு கவச உடையானது வைரசிடமிருந்து பாதுகாப்பதற்காக அளவிட முடியாத அடுக்குகளை கொண்டுள்ளது. இதனால், அவற்றை அணிபவர்களின் வியர்வை ஆவியாவது என்பது இயலாத காரியமாகி பல்வேறு பிரச்சினைகளுக்கு வித்திடுகிறது.

பேர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் உடலியக்கவியல் குறித்து ஆராய்ச்சி செய்யும் டொக்டர் ரெபேக்கா லூகாஸ் இது குறித்து கூறுகையில் "மயக்கம் மற்றும் தன்னிலையிழத்தல் முதல் தசைப்பிடிப்புகள் மற்றும் குடல், – சிறுநீரகங்களின் செயலிழப்பு வரை இதன் பாதிப்புகள் நீள்கின்றன. உடலின் பல்வேறு பகுதிகளும் சூடாகும் போது அது இன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்" என்கிறார். கொரோனா பணிக்காக பாதுகாப்பு கவச உடைகளை அணிந்துள்ள எண்ணற்றவர்களின் வெப்பநிலை இயல்பாகவே 29 செல்சியசாக உள்ளது என்பது கவலைக்குரிய விடயம். மனிதர்களான நாம் ஒரு குறிப்பிட்ட அளவிலான வெப்பநிலையில் வாழ்வதற்கு பழகிக் கொண்டுள்ளோம். எனவே உலகளவில் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருந்தால், விரைவில் உலகின் வெப்பமான பகுதிகளில் மிகவும் வெப்பமான நிலையை மட்டுமே நாம் காண நேரிடும் என்பது தெளிவாகிறது.

*- சண்*




# தமிழ்த்தை தேசிய ஜனநாயக ரீதியாக முன்னெடுப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட கூட்டமைப்பு அதற்கு எதிரான பாதையில் பயணிக்கிறது

## கிளிநொச்சியில் மாம்பழம் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு



தமிழ்த் தேசிய விடுதலைப் போரட்டத்தை ஜனநாயக ரீதியாக முன்னெடுப்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இன்று அதற்கு எதிரான பாதையில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறது. தன்னுள் இருந்த புலி ஆதரவுத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டாளர்களை முதலில் வெளியேற்றிய கூட்டமைப்பு இன்று தமிழ்மக்களின் நெஞ்சங்களில் எரிந்து கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசிய உணர்வை அணைத்து நீக்குகின்ற அரச-ியலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான பொ. ஐங்கரநேசன் குற்றம்சாட்டியுள்ளார்.



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் மாம்பழம் சின்னத்தில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றது. வேட்பாளர்களை பசுமை இயக்க உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தும் கூட்டம் கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (19.07.2020) நடைபெற்றபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தேசிய இனங்கள் எல்லாம் தங்களைத் தேசங்களாகச் சொந்தம் கொண்டாட முடியாது. இலங்கைத் தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் மாத்திரமே தேசம் என்று தங்களைக் கொண்டாடுவதற்கு உரித்துடையவர்கள். ஒரு தேசிய இனம் தேசமாகக் கருதப்படுவதற்கு அந்தத் தேசிய இனத்திற்கு ஆட்சிக்குட்பட்ட ஒரு நிலப்பரப்பு இருத்தல் வேண்டும். தமிழ்மக்களுக்கு மன்னராட்சிக் காலத்திலும் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களது காலத்திலும் அவ்வாறானதொரு நிலை இருந்தது. முள்ளிவாய்க்காலோடு எங்களிடம் இருந்து ஆட்சி பறிக்கப்பட்டுவிட்டது.





ஒரு தேசிய இனம் தேசமாகக் கருதப்படுவதற்கு குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பு இருத்தல் வேண்டும். எங்களுக்கு வடக்கு கிழக்கு அவ்வாறானதொரு பாரம்பரியத் தாயகம்தான். ஆனால், பேரினவாதம் முதலில் இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு மாறாக நிர்வாக ரீதியாக வடக்குக் கிழக்கைத் துண்டாடியது. இப்போது வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்ற திணைக்களங்களினால் நிலங்களை அபகரித்து எமக்குரிய தாயகத்தின் நிலப்பரப்பைச் சுருக்கிவருகிறது.


ஒரு தேசிய இனம் ஒரு தேசமாகக் கருதப்படுவதற்கு அந்த இனமக்கள் தாங்கள் ஒரு தேசம் என்ற உணர்வு நிலையைக் கொண்டிருத்தல் முக்கியமானது. மிகமுக்கிய பண்பாக விளங்கும் இந்த உணர்வு நிலை-யைப் பேரினவாதிகளோடு சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இல்லாமற் செய்துவருகின்றனர். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதவடிவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தவரை தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் ஒப்பிடுகிறார்கள். அமைச்சர்களாகுவதற்குத் தங்களுக்கு ஆணை தாருங்கள் என்று கேட்டு நிற்கிறார்கள்.



தமிழ்மக்களின் மனங்களில் எஞ்சியுள்ள தேசம் என்கின்ற உணர்வு நிலையையும் இல்லாமல் செய்து இலங்கை ஒரு தேசம் இலங்கை ஒரு நாடு என்ற பேரினவாதக் கோசத்திற்கு வலுச்சேர்த்து வருகின்றார்கள். சிங்களத் தேசத்துக்குள் தமிழ்த் தேசத்தைக் கரைக்கின்ற கைங்கரியத்தில் ஈடுபட்டுவருகிறார்கள். இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முற்றாக நிராகரிப்பதன் மூலம் தமிழ்மக்கள் தனியான ஒரு தேசிய இனம் மாத்திரமல்ல் தனியான ஒரு தேசம் என்பதையும் பேரினவாதிகளுக்கும் உலகத்துக்கும் உரத்துச் சொல்வோம் என்றும் தெரிவித்துள்ளார்.







# இலங்கைத் தமிழர் அரசியலில் இருந்த ஒற்றுமை இன்று இல்லை என்கிறார் மன்னார் மறை மாவட்ட ஆயர்

இலங்கையில் தமிழர் அரசியல் நிலைமை இன்னும் குழப்பமானதாக உள்ளது. முன்பு ஓரளவுக்கேனும் இருந்த ஒற்றுமை நிலைமை இன்று இல்லாது போய் விட்டது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

“தமிழ் மக்களாகிய நமக்கு இன்று இருக்கக் கூடிய ஒரேயொரு ஆயுதம் நமது வாக்குச் சீட்டுத்தான். எனவே அதை நாம் முறையாகப் பயன்படுத்தி தகுதியான பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். இது விடயத்தில் நாம் அலட்சியமாக இருக்கக் கூடாது” என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர், மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும் மேய்ப்புப்பணித் திருமடலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமடலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

“ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நாம் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றோம். “கொரோனா” வைரஸ் தாக்கமும், அச்சமும் நிறைந்த இக்கால கட்டத்தில் இந்தத் தேர்தல் நம்மை நோக்கி வருகின்றது. இன்றைய எமது அரசியல் சூழ்நிலை, தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகள், தீர்க்கப்படாத தொடரும் பிரச்சினைகள், ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்துவதன் அவசியம், வேட்பாளர்களை எப்படி இனங்காண்பது, எப்படிப்பட்ட பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் போன்றவை குறித்து சில சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

கிறிஸ்தவர்கள் பொறுப்புள்ள குடிமக்கள் என்ற வகையில் தமது அரசியல் கடமைகளை தவறாது நிறைவாக ஆற்ற வேண்டும். புனிதமான அரசியலில் எல்லா மக்களைப் போல கிறிஸ்தவர்களும் ஈடுபட வேண்டும் எனத் திருச்சபை விரும்புகின்றது, ஊக்குவிக்கின்றது. அதேவேளை மிக முக்கியமான, மிக அவசியமான சூழ்நிலையில் அன்றி பொதுவாகத் திருச்சபை கட்சி அரசியலில் ஈடுபடுவதில்லை.

இன்றைய எமது நாட்டு அரசியல் சூழ்நிலை மிகவும் சிக்கலானதாக உள்ளது. தமிழ் அரசியல் நிலைமை இன்னும் குழப்பமானதாக உள்ளது. முன்பு ஓரளவுக்கேனும் இருந்த ஒற்றுமை நிலைமை இன்று இல்லாது போய்விட்டது. உதாரணமாக வன்னித் தேர்தல் நிலமையை எடுத்துக்கொண்டால் வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 45 கட்சிகளைச் சேர்ந்த 405 உறுப்பினர்கள் போட்டியிடுகின்றனர்.

தமிழர் அரசியல் எந்தளவுக்கு சிதறிச் சின்னாபின்னமாகி இருக்கிறது என்பது இதிலிருந்து புலனாகின்றது. தமிழர் அரசியல் பலம் சிதறிடிக்கப்பட்டுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலையை நாம் நின்று நிதானித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகள் சுயாட்சி, சுயநிர்ணயம், தமிழர் தாயகம், மொழியுரிமை போன்ற தமிழ்த் தேசியத்தின் அடிப்படைகள் என்றும் மாறாதவை, எந்தவித விட்டுக்கொடுப்புக்கோ சமரசத்திற்கோ உள்ளாக்கப்பட முடியாதவை. இவற்றை முன்னிலைப்படுத்தியே பல சகாப்தங்களாக அகிம்சைப் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் தமிழ் மக்கள் முன்னெடுத்து வந்துள்ளனர்.

இவற்றை வென்றெடுக்கவே பல ஆயிரம் உயிர்களையும், உடைமைகளையும் இழந்துள்ளோம். இன்னும் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். எனவே தமிழ்த் தேசியத்திற்கு அப்பாற்பட்ட கொள்கையுடையவர்களை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழர்களாகிய நமக்கு நமது உரிமைகள் முக்கியமா அல்லது சலுகைகள் முக்கியமா என்றால் முதலில் நமது உரிமைகள் நமக்கு முக்கியம். அத்தோடு நாம் நின்று விட முடியாது.

நமது அடிப்படைத் தேவைகளும் இன்னும் நமது மக்களுக்கான அபிவிருத்திகளும் நமக்குத் தேவை. இவை இரண்டிற்குமான நமது அரசியல் போராட்டம் சமாந்தரமாகச் செல்ல வேண்டும். ஒன்றுக்காக ஒன்றை நாம் விட்டுக்கொடுக்க முடியாது. தமிழ் மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடர்கதையாகவே உள்ளன. அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு, யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு, நிலைமாறுகால நீதி போன்றவை அவசரமாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளாகும்.

இவற்றை முன்னிலைப்படுத்தி ஓங்கிக் குரல் கொடுக்கக் கூடியவர்கள், அக்கறையோடு துணிவோடு செயலாற்றக்கூடியவர்களை நாம் தெரிவு செய்ய வேண்டும். தேர்தலில் வாக்களிப்பது நமது உரிமையும் கடமையும் ஆகும். நமது இந்தப் புனிதமான ஜனநாயக உரிமையை நாம் விட்டுக்கொடுக்கவோ அல்லது நமது இந்த ஜனநாயகக் கடமையை உதாசீனம் செய்யவோ கூடாது.

சரியானவர்களையும் தவறானவர்களையும் இனங்காண்போம் இரண்டாம் வத்திக்கான் சங்கம் கண்டனத்திற்குரிய ஆட்சிமுறை குறித்துப் பேசுகின்றது. “கண்டனத்திற்குரிய அரசியல் ஆட்சிமுறைகள் சிலவிடங்களில் இருந்து கொண்டுதான் வருகின்றன. இவை குடிமை உரிமைக்கு அல்லது சமயச் சுதந்திரத்திற்கு தடை போடுகின்றன.

அரசியல் ஆதாயம் சார்ந்த, கட்டுக்கடங்காப் பேராசைக்கும் இழிசெயலுக்கும் பலரைப் பலியாக்குகின்றன. அதிகாரத்தைப் பொதுநலனுக்கெனப் பயன்படுத்தாமல் ஒருசில குறிப்பிட்ட பிரிவினருடைய அல்லது ஆட்சியாளர்களுடைய வசதிக்கெனவே திரித்து விடுகின்றன” (இன்றைய உலகில் திருச்சபை எண். 73). இத்தகைய சூழ்நிலை நமது நாட்டிலும் இல்லாமல் இல்லை. எனவே இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை நாம் சரியாக இனம்காண வேண்டும்.

ஒவ்வொரு கட்சியினதும் சுயேச்சை வேட்பாளர்களினதும் தேர்தல் வாக்குறுதிகளை நாம் நுணுக்கமாகச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மக்கள் நலன்சார்ந்த, பொதுநலன் சார்ந்த, சமய விழுமியங்களைக்கொண்ட தேர்தல் வாக்குறுகளை நாம் அடையாளம் காணவேண்டும். உண்மையான, நடைமுறைச்சாத்தியமான வாக்குறுதிகளோடு வரும் வேட்பாளர்களை ஆதரிப்போம். உண்மை, நேர்மை, சேவை மனப்பான்மை உள்ள வேட்பாளரை ஆதரிப்போம். பொய், புரளி சுயநல மனப்பான்மை கொண்ட வேட்பாளரை நிராகரிப்போம்.

மதத்துவேசம், இனத்துவேசம், மொழித்துவேசம் கொண்ட வேட்பாளர்களை நிராகரிப்போம், மதப்பற்றும், இனப்பற்றம், மொழிப்பற்றும் கொண்ட வேட்பாளர்களை ஆதரிப்போம். குழப்பவாதிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் நிராகரிப்போம். சமாதான விரும்பிகளையும், சமூக அக்கறை கொண்டவர்களையும் ஆதரிப்போம்.

அறிஞர் பேர்னாட் ஷோ கூறும் வார்த்தைகள் இவ்வேளையில் நினைவுகூரத்தக்கன: “வாக்காளர்கள் முட்டாள்களாக இருந்தால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குச் செல்பவர்கள் அயோக்கியர்களாகத்தான் இருப்பார்கள்.” எனவே நமது யதார்த்த சூழ்நிலையை நுணுகி ஆராய்ந்து, நமது தனிப்பட்ட சுயநலன்களுக்கு அப்பால் நின்று, மனச்சாட்சியின் குரலுக்கு செவிமடுத்து இத்தேர்தலைச் சந்திப்போம், நமது வாக்குரிமையைப் பயன்படுத்துவோம்.

இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



# Statement by the Canadian Prime Minister Justin Trudeau on the Anniversary of Black July

## இலங்கையின் தமிழின அழிப்பின் அடையாளமான கறுப்பு யூலை தொடர்பான நினைவுச் செய்தியை பகிர்ந்துள்ள கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ருடோ அவர்கள்...

July 23, 2020

Ottawa, Ontario






The Prime Minister, Justin Trudeau, today issued the following statement on the anniversary of Black July:

"Today, we remember the horrific events of Black July in Sri Lanka and honour the memory of its victims.

"In July 1983, anti-Tamil pogroms swept across Colombo, Sri Lanka, following decades of unrest and rising tensions in the country. Thousands of Tamils were killed and countless others were displaced. These riots sparked 26 years of armed conflict in which tens of thousands more lost their lives, devastating communities and leaving lasting physical and emotional wounds.

"Canada responded by opening its arms to those fleeing violence and persecution in Sri Lanka. Through a Special Measures program introduced in the months following Black July, more than 1,800 Tamils resettled in Canada to rebuild their lives – and help build a better country. Their contributions in the face of tremendous loss and adversity helped shape a stronger, more inclusive Canada, which is now home to one of the largest Tamil diasporas in the world.

"On behalf of the Government of Canada, I extend my deepest sympathies to all those who suffered and lost loved ones during Black July and the ensuing conflict. Canada remains committed to facilitating an accountability process that has the trust and confidence of all victims, which is central to achieving lasting peace and reconciliation. We continue to offer support to all those working toward these goals.

# கனடாவில் கறுப்பு ஜூலை – 37வது வருட நினைவு நாள் அனுஸ்டிக்கப்படுகின்றது

நமது தாயகத்தில் 37 ஆண்டுகளாகத் தொடரும் தமிழினப் படுகொலை.. கனடிய தமிழர் சமூகமும் தமிழ் மாணவர் சமூகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள துக்க நினைவு அனுஸ்டிப்பு! அனைவரும் வருக அணி திரண்டு எழுக!

மேலதிக விபரங்களுக்கு: (416) 830-7703




காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE • GROUP BENEFITS • RRSP • RESP • DISABILITY INSURANCE • LONG TERM CARE



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · BMO Insurance

Are you getting Million Dollar advice?

மலேசிய மடல்:

# மனித வணிகமும் மறைமுக அடிமைத்தனமும்



நக்கீரன்

கோலாலம்பூர், ஜூலை 23:

ஐக்கிய இராச்சியத்தைப் போல மலேசியாவிலும் முடியாட்சி இயைந்த குடியாட்சி நடைபெற்றாலும் ஜனநாயக மாண்பிற்கு எவ்வித பங்கமுமில்லை. நீதிமன்ற நடைமுறையும் சட்டத்தின் ஆட்சியும் சீராக இடம்பெற்று மக்களின் உரிமைவாழ்விற்கு துணைபுரிகின்றன. இருந்தபோதும், மலேசியாவில் மறைமுக அடிமைத்தனமும் மானுட வர்த்தகமும் இடம்பெற்று வருகின்றன என்று மனித உரிமை ஆர்வலரும் சட்ட வல்லுநருமான கார்த்திகேசன் சண்முகம் தெரிவித்துள்ளார்.

மலேசிய அரசத் தமிழ் வானொலியான “ஆர்டிஎம்” மின்னல் பண்பலை வானொலியில் அன்றாடம் காலை ஆறரை மணி முதல் பத்து மணிவரை இடம்பெறும் காலைக்கதிர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியபோது உடல் உறுப்பு வணிகம், தொழிலாளர் அடிமைத்தனம், பணி சுரண்டல், பாலியல் தொழில் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மனிதக் கடத்தல் இடம்பெற்று வருவதாக கார்த்திகேசன் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் இருந்து மலேசியாவிற்கு கடத்துதல், மலேசியாவில் இருந்து மற்ற நாடுகளுக்கு கடத்துதல், உள்நாட்டிலேயே ஓர் இடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு கடத்துதல் என மூன்று வகையில் மனிதக் கடத்தல் இடம்பெறுகின்றன என்றார் அவர்.

மக்களிடையே நிலவும் சமுதாய ஏற்றத்தாழ்வு, குறிப்பாக பொருளாதார ஏற்றத்தாழ்வு, வேலை வாய்ப்பின்மை, அறியாமை போன்ற கூறுகளை மூலதனமாகக் கொண்டு எளிமையாக மனிதக் கடத்தல் இடம்பெறுகிறது. இவ்வாறு, மனிதக் கடத்தலில் ஈடுபடுவோருக்கு பேரளவில் பொருளீட்டும் அப்பட்டமான சுயநலம்தான் தலையாய இலக்கு.



இவ்வாறு மனிதக் கடத்தலுக்கு ஆளாகும் அப்பாவி மக்கள், அதில் இருந்து மீள்வது பெரும்பாலும் குதிரைக் கொம்புதான். குறிப்பாக, கடத்தப்பட்டு பாலியல் தொழிலில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்படுவோர் காலப்போக்கில் தங்களை தக அமைத்துக் கொள்வதும் உண்டு. இருந்தபோதும், காலம் தரும் படிப்பினை, எதிர்காலம் குறித்த விழிப்புணர்வு, தன்னம்பிக்கை, குடும்ப வறுமை, தன்னூக்கம், மான உணர்வு ஆகியத் தன்மையைக் கொண்டுள்ளவர்கள் மலைகளுக்கு இடையேயான மடுவைப் போன்ற அத்தகைய பேரிடரில் இருந்து மீண்டு வருவதும் உண்டு.

மலேசியாவைப் பொறுத்தவரை, வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான தேவை தொடர்ந்து நீடித்து வருகிறது. தொழில் துறை, கட்டுமானம், வர்த்தகத் துறைகளைத் தவிர வீட்டுப் பணிப்பெண்களுக்கான தேவையும் மிகுதியாக உள்ளது. இதற்கு இரு அம்சங்கள் முக்கியமாக அடிப்படையாக இருக்கின்றன. பெரும்பாலான பெண்கள் வேலைக்குச் செல்வதும் கூட்டுக் குடும்ப அமைப்பு சிதைந்து விட்டதும்தான் அந்த இரு முகாந்திரமான காரணங்கள்.

இன்றைய கல்வி-அறிவியல் யுகத்தில் அநேகமாக அனைத்துப் பெண்களும் கல்வி அறிவு பெறுவதால், பொருளாதார சூழலைக் கருதி எல்லாப் பெண்களும் பணிக்குச் செல்கின்றனர். இப்படி வேலை தேடும் படலத்தாலும் நகரிய வாழ்க்கை முறையாலும் கூட்டுக் குடும்ப அமைப்பு இயல்பாக சிதறும் நிலைக்கு ஆளாகி பல பத்தாண்டுகள் ஆகிவிட்டன.




ஆட்கடத்தலில் ஈடுபடுவோர் இதை சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்ற-னர். வெளிநாடுகளில் வாழும் வறிய மற்றும் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் வேலைதேடுவோரும் உள்ளூர் முகவர்களால் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு மிகுதியான சம்பளம், நல்ல வாழ்க்கை என்றெல்லாம் ஆசை வார்த்தைகள் மூலம் வாக்குறுதி அளிக்கப்பட்டு ஆர்வம் ஊட்டப்படுகின்றனர்.

இதனால், எதிர்கால நம்பிக்கை வெளிச்சத்தை நினைத்துப் பார்க்கும் அத்தகையோர், கைவசம் இருக்கும் சொற்ப ஆபரணங்களையும் மற்ற உடைமைகளையும் விற்று உள்ளூர் முகவர்களிடம் கொடுத்து விடுகின்றனர். அந்த முகவர்களோ, அலுங்காமல் குலுங்காமல் அவர்களை மலேசியாவிற்கு அழைத்து வந்து உள்ளூர் முகவர்களிடம் ஒப்படைக்கின்றனர். இதை வேறு வகையில் சொல்வதென்றால் விற்று விடுகின்றனர்.

அப்படி பெண்களையும் தொழிலாளர்கலையும் வாங்கும் உள்நாட்டு முகவர்கள், மறைமுகமாக விலைக்கு வாங்கப்பட்டவர்களின் தகுதி, தோற்றம், வயது, கல்வி போன்றவற்றின் அடிப்படையில் தொழிற்சாலை, வீடு, உடம்பு பிடித்துவிடும் நிலையம் என்றெல்லாம் வேலைக்கு அனுப்பி விடுகின்றனர் அதாவது விற்று விடுகின்றனர்.

அவ்வாறு செல்லும் தொழிலாளர்கள் நீண்டகாலம் ஊதியம் இன்றி உணவை மட்டும் பெற்றுக் கொண்டு உழைக்க நேரிடுகிறது. உள்நாட்டு முகவர், மலேசிய முகவர் ஆகியத் தரப்பினரின் தொடர்பு அற்றுவிட்ட நிலையில், மூன்றாம் தரப்பினரிடம் சிக்கிக் கொள்ளும் இப்படிப்பட்டவர்கள் ஏறக்குறைய அடிமைத்தனத்திற்கும் உழைப்பு சுரண்டலுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

வெளிநாட்டினரை பணிக்கு அமர்த்துவோர், அதற்காக தாங்கள் உள்நாட்டு முகவரிடம் செலுத்திய தொகைக்கு உழைத்து ஈடுகட்டும்படி சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை வலியுறுத்துகின்றனர். மொத்த்தில், ஜனநாயாக முறையில் மக்களாட்சி மலர்ந்து மணம் பரப்பும் இன்றைய சுழலிலும் ஆண்டான்-அடிமைத் தனம் இடம்பெறுவதற்கு மனித வர்த்தகத்தில் ஈடுபடுவோர் காரணமாக உள்ளனர்.



கைவசம் இருந்த பொன்னையும் பொருளையும் இழந்து, ஆள்மாறி இடம்மாறி கடைசியில் சம்பந்தமே இல்லாத ஓரிடத்தில் அடிமைப்படும் அவலம் அன்றாடம் என்றில்லாமல் ஒவ்வொரு வேளையும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இதற்கான கட்டமைப்பும் சங்கிலித் தொடர் நடவடிக்கையும் ஓர் உணவகத்தில் உணவருந்தும் வேளையிலோ அல்லது ஒரு குவளை தேநீர் பருகும் நேரத்தில்கூட வடிவமைக்கப்படுகிறது.

இதேக் கட்டமைப்பில் மலேசியாவில் இருந்து வேறு நாடுகளுக்கு மனிதர்களைக் மறைமுகமாகக் கடத்துவது, அல்லது விற்பது அல்லது அடிமைத்தனத்திற்கு ஆட்படுத்தும் நடவடிக்கையும் தொடர்கிறது.

இதில், மருத்துவ துறை சார்ந்து உடல் உறுப்புகளுக்காகவும் இத்தகைய நடவடிக்கை தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. மொத்தத்தில், சுரண்டல், பாலியல் தொழில், அடிமைத்தனம் ஆகியவற்றின் மூலம் இலாப நோக்கத்தை முதன்மையாக்க கொண்ட சுயநல மனிதர்களிடம் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வும் எச்சரிக்கை உணர்வும் மிகமிகத் தேவை என்று வலியுறுத்திய சமூகவாதியுமான கார்த்திகேசன், மலேசியாவைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட மனிதக் கடத்தல், மறைமுக அடிமைத்தனம், சுரண்டல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் நடைமுறையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக, குழந்தைக் கடத்தலுக்கு எதிரான சட்டம் முழு வீச்சில் அமலில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

மனித உரிமை தொடர்பான சட்டத்தின் 12-ஆவது பிரிவு குழந்தைக் கடத்தலுக்கு எதிரானது 13-ஆவது பிரிவு குழந்தைகள் மற்றும் பெரியவர்களைக் கடத்துதல் மற்றும் அவர்களின் மனித உரிமை மீறலுக்கு எதிரானது 14-ஆவது பிரிவு, குழந்தை கடத்தலில் ஈடுபடுவோருக்கு 20 ஆண்டுகள் வரையிலான சிறைவாசத்துடன் தண்டத்தையும் அளிக்கக்கூடியது அதைப்போல மனிதக் கடத்தல்வழி இலாபம் அடைந்தவர்களுக்கு எதிரான தண்டனையை 15-ஆவது பிரிவு வழங்குகிறது என்றெல்லாம் நேரடி ஒலிபரப்பின்வழி விளக்கம் அளித்த வழக்கறிஞரும் வழக்குரைஞருமான கார்த்திகேசன் சண்முகத்தை, நிகழ்ச்சியை வழிநடத்திய மின்னல் பண்பலை வானொலி அறிவிப்பாளர்களான தெய்வீகன் தாமரைச்செல்வன், சுகன்யா சதாசிவம் இருவரும் பாராட்டினர்.



உண்மையில், கொடிய ஆட்கொல்லி கிருமியான கோவிட்-19இன் தாக்கத்தில் இருந்து நாடு மெல்ல மீட்சி காண முனைந்துள்ள இந்த வேளையில், காலம் கருதி, சமூக அக்கறையுடன் பொருத்தமான ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து அதன்வழி சமுதாயத்திற்குத் தேவையான விழிப்புணர்வை பொறுப்பான வகையில் வழங்கிய மின்னல் பண்பலை வானொலியின் அறிவிப்பாளர்கள் சமுதாயத்தின் பாராட்டிற்கு உரியவர்கள்.

எல்லாவற்றையும்விட, இதற்கெல்லாம் ஆதாரமாக இருந்து வழிகாட்டிவரும் அரசத் தமிழ் வானொலிப் பிரிவின் நிருவாகி திருமதி. சுமதியும் பாராட்டிற்கு உரியவர்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24




Mississauga.
மனோதிடமானது. தயாராயிருப்பது.

உணவகத்திற்கான தற்காலிக வெளிமுற்றங்கள்

தனியார் சொத்து அல்லது பொதுவெளிகளில், உதாரணமாக பக்கவாட்டு நடைபாதைகளில் வெளிமுற்றம் அமைக்கவோ அல்லது விரிவுபடுத்தவோ விண்ணப்பிக்கவும்

mississauga.ca/temporarypatio

MISSISSAUGA


Amma
Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE
WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN
CANADA
Apple Cider
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN
CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml


Amma
Herbal
Juices
NOW
IN
CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
Aloe Noni with Aloevera Juice
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# அண்ணிக்கான வேண்டுகோள்.

சசிகலா மிகவும் நேர்மையான எளிமையான கூர்மையான ஆளுமை நிறைந்த புத்திசாலி ஆவர். பதவிக்காகவோ அந்தஸ்துக்காகவோ அரசியலில் நுழையவில்லை. அவர் எனது அண்ணா காட்டிய வழியில் மக்களுக்கு சேவையாற்றவே அரசியலுக்கு வந்துள்ளார். அண்ணாவின் அகால மறைவுக்குப்பின் தனது பிள்ளைகளை ஆளாக்க வேண்டும் என்று தனி குடும்பத் தலைவியாக பிள்ளைகளை சட்டத்துறையிலும் மருத்துவத்துறையிலும் கற்க விட்டு, பல சவால்களுக்கு மத்தியில் வளர்த்து ஆளாக்கி விட்டார். யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட பட்டதாரியான இவர் ஆசிரியப் பணியை கொழும்பில் பிரபல்யமான தனியார் பாடசாலையில் (Bishop's College) பௌதீகவியல் (Physics) ஆசிரியராக இவ்வாண்டு வரை ஏறத்தாழ 30 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி, பெண்பிள்ளைகளின் வழிகாட்டியாக திகழ்ந்தவர். இன்று எல்லாப் பொறுப்புகளையும் சரிவர செய்து அண்ணாவின் அபிலாசைகளை நிறைவேற்ற தனது விருப்பத்துடன் அவர் காட்டிய வழியை பின்பற்றி அரசியலில் இறங்கவுள்ளார். சசி அண்ணி அதிகம் தேவையில்லாமல் கதைக்க மாட்டார். கதைத்தால் முக்கிய விடயங்களே பெரும்பாலும் இருக்கும். அவர் அண்ணாவுடன் இணைந்து ஒப்பேற்றி வைத்த திருமணங்கள் ஏராளம். அவர்களின் கொழும்பு இல்லம் எத்தனையோ உறவினர்கள் நண்பர்கள் தங்கிச் செல்லும் இடமாகும். இன்று வெளிநாடுகளில் இருக்கும் பல உறவுக்காரர்கள் இவரின் வீட்டில் இருந்தே சென்றுள்ளார்கள். அண்ணா தான் தேர்ந்தெடுத்த வாழ்க்கை துணைவி. அவர் தனக்கு பொருத்தமானவரையே தேர்ந்து எடுத்திருக்க வேண்டும். எனவே அவர் பாதை வழி சென்று வாழ்க்கையில் அரசியல் பாடத்தை அனுபவித்து உணர்ந்தவர். பல இன்னல்களையும் எதிர் நீச்சல் கொண்டவர் என்ற ரீதியில் எளிமையான அவரை அரசியல் பிரதிநிதியாக தெரிவு செய்து வாக்களிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.





புலம் பெயர் மக்களே எனது அண்ணா விட்டுச்சென்ற பாதையை பின் தொடர்ந்து செல்ல சசிகலா ரவிராஜ் அவருக்கு ஆதரவு வழங்குமாறு உங்கள் உறவுகளுக்கு வேண்டுகோள் விடுங்கள்.

**நடராஜா ரவிராஜின் அன்புத் தங்கை,**
**வாசுகி தேவதாஸ்**
**சட்டத்தரணி**






# மேலதிகமான உள்ளூர் சமூக வணிகங்களும் சேவைகளும் மீண்டும் திறக்கப்படுவதனாலும், சமூகமாக ஒன்றுகூடும் நபர்களின் தொகை 10 ஆக அதிகரிப்பதனாலும், நாம் அனைவரும் ஒருவரையொருவர் பாதுகாக்கும் எமது முயற்சிகளைக் கண்டிப்பாகத் தொடர வேண்டும்.





**உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்**, இரண்டு மீட்டர் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்



உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலாக இருக்கும்போது, **முகக்கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளவும்.**



**தொடர்ச்சியாக அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளவும்**



உங்களுக்கு COVID-19 இருப்பதாக அல்லது அந்த வைரஸ் தாக்கத்துக்கு நீங்கள் முகம் கொடுத்திருப்பதாக எண்ணினால், **சோதனைக்கு உட்படவும்.**

**வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பாக இருந்து கொள்ளவும். உயிர்களைப் பாதுகாக்கவும்.**

ontario.ca/coronavirus ஐப் பார்வையிடவும்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

$ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
$ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
$ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
$ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
$ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

#5

நக்கீரன் - கனடா

பவுத்த மதத்தின் செல்வாக்குக் காரணமாக சிங்களவர்களிடையே நிலவும் சாதியம் தமிழர்களிடையே நிலவும் சாதியம் போல் இறுக்கமாக இல்லை. தமிழ்ச் சமூகத்தில் இருப்பது போல சிங்கள சமூகத்திடையே சாதி அடிப்படையில் உயர்வு தாழ்வு இருந்தாலும் தீண்டாமை இல்லை. விதிவிலக்கு வகும்புர, பாடு, பெரவா, றொடியா போன்றோர் இன்றும் தீண்டத்தகாதவர்களாக மிகவும் ஒடுக்குண்ட தாழ்ந்த சிங்களச் சமூகங்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

விமல் வீரவன்ச பெரவா என்ற சமூகத்தைச் சேர்ந்தவர். இந்தச் சமூகம் கேரளாவிலிருந்து (மலபாரிலிருந்து) செண்டு மேளம் இசைக்க அழைத்து வரப்பட்டவர்கள் எனக் கூறப்படுகின்றது. மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) மேற்கொண்ட கிளர்ச்சியின் போது அந்த இயக்கத்தில் கரவா சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் மேற்சொன்ன மிகவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரே அதிகளவில் பங்கேற்றனர்.

பவுத்த கோயிலுக்குள் எல்லோரும் அனுமதிக்கப்படுகிறார்கள். பள்ளிக்கூடங்களிலும் அனைத்து சாதியனரும் அனுமதிக்கப்படுகிறார்கள். இருந்தபோதிலும் திருமணம் என்று வரும்போது சாதி பார்க்கும் வழக்கம் தமிழர்களிடம் இருப்பது போன்று சிங்கள சமூகத்திலும் காணப்படுகிறது.

றொடியா சாதிப் பெண்கள்

அரசியல் கட்சிகளின் தலைமைப் பதவி பெரும்பாலும் கொய்கம சாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். தேர்தல் காலங்களில் சாதியப்பாகுபாடுகளின் அடிப்படையில் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுவதையும் வாக்குச்சேகரிப்பு நிகழ்வதையும் காணலாம்.

ஒரு காலத்தில் கண்டிச் சிங்களவர்கள் கரையோரச் சிங்களவர்கள் என்ற பிரிவினை இருந்தது. இவர்களிடையே திருமணம் இடம்பெறுவதில்லை. ஏன் கண்டிச் சிங்களவர் கரையோரச் சிங்களவர்களைச் சிங்களவர் என்றே சொல்வதில்லை. இன்று கண்டிச் சிங்களவர் கரையோரச் சிங்களவர் என்ற பாகுபாடு பேரளவு இல்லாது போய்விட்டது.

பெரும்பாலும் அரசியல் அதிகாரமும் செல்வமும் சாதிக்கு மாற்றாக இலங்கையின் சமூக அடுக்கின் முக்கிய காரணியாக மாறியுள்ளன.

1946 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், மத்திய, வட மத்திய, ஊவா மற்றும் சப்பரகாமுவ மாகாணங்கள், குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்கள் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களின் 'சிங்களப் பிரிவுகள்' தொடர்ந்து கண்டிய சிங்களவர்களின் வாழ்விடமாகக் கருதப்பட்டனர். மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்கள் மற்றும் சிலாபம் மற்றும் புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கரையோரச் சிங்களவர்கள் எனக் கருதப்பட்டனர்.

இப்படி சிங்களவர்களைக் கண்டியச் சிங்களவர் கரையோரச் சிங்களவர் எனப் பிரித்துப் பார்க்கும்



முறைமை 1901 - 1971 வரை நீடித்தது. 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இரு சாராரும் இணைக்கப்பட்டனர்.

சாதியமைப்பின் ஊற்றுக்கண் வர்ணாசிரம தர்மமே. வருணாசிரம கோட்பாட்டின்படி பிராமணரே உயர்ந்தவர்கள். அடுத்து ஷத்திரியர்களும், வைசியர்களும் நான்காவதாக சூத்திரர்களும் வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த வருண அமைப்பே பின்னர் அவரவர் செய்யும் தொழில் அடிப்படையில் ஆயிரக் கணக்கான சாதிகள் உருவாகக் காரணமாக இருந்தது. அப்படி உருவாக்கப்பட்ட பின்னர் அது பிறப்பின் அடிப்படையில் அமைந்துவிட்டது. முன்னைய காலங்களில் வேளாளர் என்போர் பயிர்த் தொழில் செய்தார்கள். இன்று அவர்களில் பெரும்பான்மை வேறு வேறு தொழில் செய்கிறார்கள். இருந்தும் பிறப்பின் அடிப்படையில் வந்த சாதி தொடர்கிறது.

மொத்தம் 443 ஆண்டு கால கொலனித்துவ ஆட்சி, பொருளாதார உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள், எல்லோரும் கல்வி கற்கும் வாய்ப்பு, போக்குவரத்து போன்ற காரணிகளால் சாதிக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. சில சாதிகள் வழக்கொழிந்து போயின. சில சாதிகள் புதிதாகப் புகுந்து கொண்டன. தகப்பன் செய்த தொழிலை மகன் செய்ய வேண்டும் என்ற நியதி பேரளவு குறைந்துவிட்டது.

எம்எல்டி மகிந்தபால போன்ற தீவிர – சிங்கள பவுத்த தேசியவாதிகள் தமிழ்மக்களது அரசியலில் வேளாளரின் ஆதிக்கம் இருப்பதாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல் எறியக் கூடாது. சாதி பாகுபாட்டில் தமிழ் – சிங்கள சமூகங்கள் இரண்டுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல. இரண்டுமே குற்றவாளிகள்தான். இலங்கைத் தீவில் சிங்களவர் பெரும்பான்மையாக இருப்பதற்குக் காரணம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் தமிழ்நாட்டில் இருந்து கூட்டிவரப்பட்ட தமிழர்கள் நாளடைவில் சிங்களமயப் படுத்தப்பட்டதே. சிங்கள சமூகத்தில் காணப்படும் கரவா, சலகம, துவார சாதியினர் இப்படி தமிழ்நாட்டில் இருந்து கூட்டிவரப்பட்டவர்கள் ஆகும்.

தென்னிலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்கள் நிலையான படையணிகளை வைத்திருப்பதில்லை. அரியணைக்கான போட்டியின் போது சிங்கள மன்னர்கள் பாண்டிநாட்டில் இருந்து படை திரட்டி வருவது வழக்கமாக இருந்தது.

முதலாவது இராசராசன் அவனது மகன் முதலாவது இராசேந்திரன் காலத்தில் சோழர்கள் இலங்கை

*(தொடர்ச்சி 15ம் பக்கம்)*





Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# இவ்வார ராசிபலன்

**24-07-2020 வெள்ளி தொடக்கம் 30-07-2020 வியாழன் வரையும்**

**மேஷம்:**
பாராட்டுகள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். தேவைகள் அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் கூடும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. சாதகமான வாய்ப்பு உருவாகும். மத வழிபாடு மாற்றங்களை ஏற்படுத்தும். அதிர்ஷ்ட எண் - 2,6,1,7
அதிர்ஷ்ட நிறம் - வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் - S, A

**ரிஷபம்:**
முயற்சிகள் அதிகம் தேவை. கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். உடல் நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. வெகுமதி பெருகும் நாள். வாகன செலவு ஏற்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. விக்ரஹ வழிபாட்டால் விரும்பியது நிறைவேறும். அதிர்ஷ்ட எண் - 1,5,1,9
அதிர்ஷ்ட நிறம் - சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள் - O,D

**மிதுனம்:**
நன்மைகள் நாடிவரும். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். வாய்ப்புக்கள் பெருகும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். சந்திர வழிபாடு சந்தோஷத்தை அதிகப்படுத்தும்.
அதிர்ஷ்ட எண் - 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம் - குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள் - K, X

**கடகம்:**
கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரமான நாள். பணப்பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். கோபுர வழிபாட்டால் குடும்ப மேன்மை உண்டு.
அதிர்ஷ்ட எண் - 8,6,2,9
அதிர்ஷ்ட நிறம் - வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள் - D,O

**சிம்மம்:**
முத்தான வாய்ப்புகள் பெருகும். பிள்ளைகாளல் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். கௌரவமான நாள். கலைத் தொழில் திருப்பத்தை ஏறபடுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிட தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பால்தானம் பாவம் போக்கும்.
அதிர்ஷ்ட எண் - 1,3,7,1
அதிர்ஷ்ட நிறம் - யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள் - B,Z

**கன்னி:**
நட்டம் இல்லாத நாள். பட்டம் பதவி வந்து சேரும்.யோகமான நாள். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. நந்தி வழிபாட்டால் நல்லோர் வாழ்த்து கிட்டும். அதிர்ஷ்ட எண் - 4,2,0,7
அதிர்ஷ்ட நிறம் - அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் - H,T

**துலாம்:**
வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வாழ்த்துக்கள் கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சூழ்நிலைகளைச் சமாளிக்க சூரிய வழிபாடு அவசியம். அதிர்ஷ்ட எண் - 2,4,6,8
அதிர்ஷ்ட நிறம் - கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள் - G,I

**விருச்சிகம்:**
குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கன்னிப் பெண்களுக்கு சுபச் செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவ செலவு அதிகரிக்கும். மனச்சஞ்சலம் ஏற்படும். பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். அதிர்ஷ்ட எண் - 9,5,3,1
அதிர்ஷ்ட நிறம் - நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள் - N,V

**தனுசு:**
கலகலப்பான நாள். உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர். எதார்த்தமாக செயல்படவும்.குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புதமான நாள். இரும்பு தொழில் ஏற்றம் தரும். விளையாட்டு துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். விரயங்கள் அதிகமாகும். கடவுள் பிரார்த்தனை கலக்கத்தை போக்கும். அதிர்ஷ்ட எண் - 2,0,8,8
அதிர்ஷ்ட நிறம் - மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள் - Z,F

**மகரம்:**
அலைச்சல் அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத் தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். சுபச் செய்தி தேடிவரும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும்.
உடல் நலம் சீராகும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். அதிர்ஷ்ட எண் - 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம் - முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள் - Q,V

**கும்பம்:**
வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பணவரவு மேலோங்கும். பாக்கிகள் வசூலாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிச்சனைகள் முடிவுக்கு வரும். ஆபரணத் தொழில் கவனம் தேவை. கருட வழிபாட்டால் கடன் தீரும்.
அதிர்ஷ்ட எண் - 6,2,4,0
அதிர்ஷ்ட நிறம் - ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் - L,G

**மீனம்:**
கிருபைகள் சேரும் நாள். மருத்துவ செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆடம்பர பொருள் சேரும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பங்குச் சந்தை லாபம் தரும். பணியாட்களிடம் கவனம் தேவை. சேமிப்பு அதிகரிக்கும். வலம்புரி வழிபாடு வளம் சேர்க்கும்.
அதிர்ஷ்ட எண் - 5,8,6,1
அதிர்ஷ்ட நிறம் - காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள் - R,G



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


# இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

(13ம் பக்கத் தொடர்ச்சி)

மீது படையெடுத்துவந்து சுமார் 77 ஆண்டு காலம் (கிபி 993–1070) ஆட்சி செய்தார்கள்.

இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தன் என்பவன், சோழர்களுக்கும் அவர்களின் பகைவர்களான பாண்டியர், சேரர் ஆகியோருக்கும் இடையிலான அதிகாரப் போட்டியில் சோழரின் பகைவர்களுக்கு ஆதரவு கொடுத்ததாகத் தெரிகிறது. இதனால் சோழ மன்னனான முதலாம் இராசராசன் கி.பி 993 இல் இலங்கையின் மீது படையெடுத்து தலை நகரமான அனுராதபுரத்துடன் சேர்த்து நாட்டின் வட பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். அனுராதபுரத்தைக் கைவிட்டுப் பொலன்னறுவையைத் தலைநகரம் ஆக்கினான்.

சோழர் ஆட்சிக்குட்பட்ட இலங்கையின் பகுதி மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிடப்பட்டு, தலைநகரான பொலன்னறுவையும் ஜனநாதமங்கலம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆயினும் இலங்கையின் தென்பகுதியான உருகுண இராச்சியம் 24 ஆண்டுகள் ஐந்தாம் மகிந்த மன்னன் தலைமையில் சோழர் இடையூறு இன்றி ஆட்சி நடத்தி வந்தது.

கிபி 1018 இல் இராசேந்திர சோழன் மேற்கொண்ட படையெடுப்பில் பெரும் வெற்றி பெற்று ஈழத்தின் எஞ்சிய இடங்களைக் கைப்பற்றி சிங்கள பட்டத்து அரசன், அரசி, இளவரசி ஆகியோரைச் சிறைப்படுத்திச் சோழநாட்டிற்குக் கொண்டு சென்றான். சிங்கள அரசன் ஐந்தாம் மஹிந்தா பன்னிரெண்டு ஆண்டுக்காலச் சிறைவாசத்துக்குப் பிறகு சிறையிலேயே இறந்து போனான்.

இந்தப் படையெடுப்பின் போது இலங்கை வந்த சோழர்களின் வேலைக்காரப் படையணிகள் இலங்கையிலே தங்கிவிட்டனர். பாண்டியர் படையெடுப்புகளின் போதும் பாண்டியப் படைகள் இங்கேயே தங்கிவிட்டனர்.

கிபி 1215 இல், கலிங்கத்திலிருந்து 100 கப்பல்களில் 690 கடல் மைல் தாண்டி 24,000 படையினருடன் வந்த கலிங்க மாகன், பொலன்னறுவை அரசை ஆக்கிரமித்து அதனைக் கைப்பற்றிக்கொண்டான். இவர்களும் இலங்கையில் தங்கிவிட்டார்கள்.

பல்லவர் காலத்தில் (கிபி 6 ஆம் நூற்றாண்டளவில்) தமிழ்நாட்டில் உருவாகிய பக்தி இயக்கத்தின் தாக்கம் காரணமாக அங்கு வாழ்ந்த தமிழ் பவுத்தர்கள் இலங்கைக்கு இடம் பெயர்ந்தார்கள். இவர்கள் நாளடைவில் சிங்கள பவுத்தர்களாக மாறிவிட்டனர்.

சிங்களத்தில் காணப்படும் பெரும்பான்மை பெயர்கள், உறவுப் பெயர்கள், ஊர்ப்பெயர்கள் தமிழில் உள்ளது போலவே காணப்படுகின்றன. சிங்கள மொழி-யில் காணப்படும் சொற்களில் 25 விழுக்காடு தமிழ்ச் சொற்களே. எஞ்சியவை, எலு (ஹெல) பாளி, சமற்கிருத மொழிகளைச் சார்ந்தவை.

தமிழ்ச் சொற்கள் எவ்வகை வடிவு மாற்றமும் இன்றி இடம் பெறுதல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை போன்று அமைதல், தமிழ்ப் பேச்சு வழக்கு திருந்திய சொல் வடிவாக இடம்பெறுதல், "யா" என்னும் எழுத்தொலி சேர்ந்து சிங்களத்தில் இடம் பெறுதல், சிதைந்து வருதல், யகரம் சகரமாக மாறுவது போன்று போலியாய் இடம் பெறுதல் எனத் தமிழ் இலக்கணத்துக்கு ஏற்றாற்போல் தமிழ்ச் சொற்கள் பலவாறு மாற்றமடைந்து சிங்கள மொழியில் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாகவே தமிழர்கள் சிங்கள மொழியை இலகுவாகப் பேச, எழுதப் பழகிவிடுகிறார்கள்.

சோழர்கள் காலத்தில்தான் தமிழ் ஆட்சி மொழியாக மாற்றப்பட்டது. சோழர் ஆட்சிக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னர்கள் கூடத் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் தமிழ்மொழியிலேயே கல்வெட்டுக்களைப் பொறித்துள்ளனர். நயினாதீவுக் கல்வெட்டு என்பது, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் அமைந்துள்ள நயினாதீவில் உள்ள அம்மன் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு ஆகும்.

முதலாம் பராக்கிரமபாகு என்னும் சிங்கள அரசனால் வெளியிடப்பட்ட இக்கல்வெட்டுத் தமிழ் மொழியிலும் சில பகுதிகள் வடமொழியிலும் உள்ளன. இதன் எழுத்தமைதி கொண்டும் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தை அடிப்படையாக வைத்தும் இக்கல்வெட்டு 12 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டது எனக் கொள்ளப்படுகிறது. பிறநாட்டு வணிகர்களுக்கான வசதிகள், வரிகள் என்பன குறித்து இக்கல்வெட்டு எடுத்துக் கூறுகிறது.

(வளரும்)

# ஈழத்துத் திருக்கோவில்கள்



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com



## மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்

### - கொழும்பு -

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டதோடு பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில், அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற, பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரசின் வழிகாட்டல்களை ஏற்று, பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகளாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு, தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரோனா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி, அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

**மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்**

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்'

ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடு நாமும் நலமடைந்து, உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.

ஈழவரலாற்றை நோக்கின் ஈழத்திற்கும், இந்தியாவிற்குமான தொடர்பு மிகத் தொன்மை வாய்ந்தது. தமிழ் அரசர் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த காலங்களிலும், அன்னியராகிய ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலங்களிலும், நெசவுத் தொழில் செய்யும் மக்கள் ஈழத்திற்கு அழைக்கப்பட்டு, ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் குடியமர்த்தப்பட்டனர். கி.பி. 1815 ஆம் ஆண்டு ஈழம் முழுவதும் ஆங்கிலேயர் வசம் வீழ்ந்தது. இந்நிலையில் வர்த்தகரீதியான முன்னேற்ற நடவடிக்கைகளை ஆங்கில அரசு மேற்கொண்டது. தனியார்கள் வர்த்தகத்துறையில் ஈடுபட ஊக்குவிக்கப்பட்டனர். கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதி வெள்ளவத்தை. இப்பிரதேசத்தில் மயூரபதி என்றழைக்கப்படும் பகுதியில் நெசவாலை ஒன்று தனிப்பட்டோர் முயற்சியில் உருவாகியது. இத்தொழில் இலங்கைக்குப் புதிய துறையாக இருந்த காரணத்தால், தென்னிந்திய மாநிலங்களான கேரளா, தமிழ்நாடு போன்ற இடங்களிலிருந்து நெசவுத்துறையில் திறம்படப் பணியாற்றவல்ல தொழிலாளர்களைக் கொழும்புக்கு வருவித்தனர். அம்மக்கள் வாழ்வதற்காக நெசவாலைக்கு அண்மையில் தொடர் மாடிவீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு குடியேறிய மக்கள் தமது தாயகத்திலே கடைப்பிடித்த பூர்வீக வழிபாட்டு முறைகளையும் தாம் வதியும் இடத்திலே கடைப்பிடிக்க விரும்பினர். இதனால் அவர்கள் வசித்த தொடர்மாடி வீடுகளுக்கிடையே ஒரு மண்டபத்தை வழிபாட்டுக்காக ஒதுக்கிக் கொடுத்தனர். நெசவுத்தொழில் செய்யும் மக்கள் பெரும்பாலும் காத்தற்கடவுளாகிய திருமாலை வழிபடும் வழக்கம் கொண்டவர்களாகக் காணப்பட்டமையினால், திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீ வரதராஜப்பெருமாள் வழிபாட்டை ஆரம்பித்தனர். இவ்வாலயத்தின் முன் இருஅரசமரங்களுக்கிடையே ஒரு வேப்பமரம் காணப்பட்டது. இவ்வேப்பமரத்தில் ஒரு சூலத்தை நிறுவித் தகரக்கொட்டில் அமைத்து காளியம்பாளாக வழிபாடியற்றத் தொடங்கினர்.

இவ் வழிபாட்டிடம் ஆதிமூலமான நாராயணனும், அவர் தங்கையான ஆதிபராசக்தி வடிவமான காளியும் ஒருங்கே எழுந்தருளி அடியவர் குறைதீர்த்து அருள்புரியும் ஆலயமாகப் பிரசித்தி பெற்றது. வெப்பம் மிகுந்து அதனால் ஏற்படும் கொள்ளை நோய்களிலிருந்து விடுபட அன்னையின் அருளை வேண்டி வருடத்தில் ஒரு முறை குளிர்க்கஞ்சி வைபவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. அன்னையைக் குளிர்விக்கும் நோக்கில் இவ்வேளையில் குளிர்மை பொருந்திய அமுதினையும், பழங்களையும் அன்னைக்குப்படைப்பதன் மூலம், கோரமான பததிரகாளி அன்னையைச் சாந்தப்படுத்தி, வேண்டிய வரங்களைப் பெற முடியும் என்ற நம்பிக்கை மக்களிடையே ஆழமாக வேரூன்றிக் காணப்பட்டது. அவ்வாறே அம்மை, வாந்திபேதி, போன்ற நோய்களிலிருந்தும் விடுதலை பெற்றுள்ளனர். இவ்வாறு குளிர்க்கஞ்சி காய்ச்சும் வைபவம் ஒவ்வொரு ஆண்டும் ஆவணிமாதத்தில் நடைபெற்று வந்துள்ளது.

*வளரும்...*

Carefirst Family Health Team
Accepting New Patients



புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
✦ தமிழ் பேசும் வைத்தியர்கள்
✦ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
✦ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
✦ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
✦ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
✦ நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# #5 சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

"தமிழ்நாட்டின் கலையுலக திலகமே!"

செந்தமிழ் நாட்டின் கலையுலக திலகமே!" என ஆரம்பிக்கும் பாடல் வரிகள் இடம் பெற்ற திரைப்படம் "வடிவுக்கு வளைகாப்பு". பிரபல குணச்சித்திர நடிகர் வி. கே. ராமசாமி அவர்களின் தயாரிப்பில் அருட்செல்வர் ஏபி நாகராஜன் கதை வசனம் இயக்கத்தில் 1962 இல் வெளிவந்த படமாகும்.

திரையில் நடிகர் திலகம்அவர்கள், நடராஜப் பெருமானை பார்த்து பாடும் காட்சியது. ஆனால் அப்பாடல் வரிகள் சிவாஜிக்காக எழுதப்பட்டது போல் அமைந்து விட்டது. ஆமாம் "தமிழ்நாட்டின் கலையுலக திலகம்" நடிகர் திலகம் அவர்கள் தான்.




தமிழ்நாடு காந்திய இயக்கத் தலைவரும் தமிழறிஞருமாகிய திரு. தமிழருவி மணியன் எழுதிய "திரையுலகின் தவப்புதல்வன்" நூல் வெளியீட்டின் போது ம.தி.மு.க தலைவரும் நாவலரும் ஆகிய திரு வைகோ, சிவாஜி பற்றி ஆற்றிய உரையின் சில பகுதிகளை இத்தொகுப்பில் பதிவு செய்வது பொருத்தமாகும்.

"....... என் நெஞ்சை நிரந்தரமாக அள்ளிக் கொண்டவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். அவருக்கு நிகரான நடிகர் ஒருவர் பிறந்ததும் இல்லை. இனி பிறக்கப் போவதற்கு உத்தரவாதமும் இல்லை. இமயமலையில் எந்த மூலை சிறப்பானது என்று கூற முடியுமா!

கடலின் எந்தப் பகுதி அழகானது என்று சொல்வது நியாயம் ஆகுமா? பரந்து விரிந்த ஆழ்கடல்! சிவாஜி அவர்களின் விழிகளின் வசீகர கூர்மையை சொல்வேனா! ராஜ கம்பீர தோற்றத்தை சொல்வேனா! ஒன்பது வகையான பாவனைகளை தொண்ணூறு வீதமாக நடித்துக் காட்டும் அந்த ஆற்றல்களை வியப்பேனா!

"இப்படி ஒரு நடிகன் இதுவரை உலகில் பிறந்ததும் இல்லை, இனி பிறக்கப் போவதற்கு உறுதியும் இல்லை" என்று கவியரசு கண்ணதாசன் கூறினாரே! அவர் வாக்கு பொய்யாகாது!



இவ்வாறு தமிழ் கூறும் நல்லுலகின் அறிஞர்களும் மேலைநாட்டுக் கலைஞர்களும் உவந்து பாராட்டும் இம்மாபெரும் "திலகம்" பற்றி நமது ஈழநாட்டின் சிறந்த சிந்தனைவாதி பொதுவுடமை தத்துவங்களால் கவரப்பட்ட இலக்கியவாதியும் எழுத்தாளருமான எஸ். அகஸ்தியர் அவர்கள் எழுதும் போது பின்வருமாறு சிலாகிக்கிறார்.

ஆரம்பத்தில் நாடகத்திலும் பின் உன்னதக் கலை வடிவமான சினிமாவிலும் கால் பதித்த புத்திஜீவியும், நிதான சிந்தனைவாதியுமான நடிகர் தான் சிவாஜி கணேசன் எனும் கலைஞன்.

பெரியாரின் தி.க, அண்ணாவின் திமுக பாசறையில் தோற்றம் கொண்ட சிவாஜிகணேசன் திமுகவின் பிரிவினை வாதத்திற்கு இன்றுவரை (இறக்கும்வரை) இரையாகமலே இந்திய தேசாபிமானியாகத் திகழ்வதோடு மு. கருணாநிதியின் திமுக வினாலும் மேன்மைப்படுத்தபடுவதுதான் சிவாஜி கணேசனின் இன்னும் ஒரு சாதனையாகும்!

மெய்யியல் கருத்தியல் தன்மைகளுடன் கலைப்படைப்புகளை வெளிக்கொண்டுவரும் சத்யஜித்ரே, மார்ட்டின் விக்கிரமசிங்க போன்ற படைப்பாளிகளின் கலைகள் உன்னத ஸ்தானம் வகிக்கும் அவர்கள் வரித்துக்கொண்ட இயக்கவியலின் எதார்த்த பூர்வ கருத்தியல் ஆகும்.

இக்கருத்தியலை நாம் சிவாஜி போன்ற கலைஞரிடம் முழுமையாக பார்க்க முடியாவிடினும் அவர்தம் கலையின் வரும் கூற்றினை ஒரு மானிட தர்ம தேசத்தின் பால் எழும் மானசீக உணர்வாக பார்க்க முடிகிறது.

இந்தியாவில் மட்டுமின்றி உலகம் பூராவும் எவரையும் விட தமிழ் சினிமா உலகம் அதிகம் அறியப்பட்டவரும் பேசிக் கொள்ளப்படுபவரும் சிவாஜி கணேசன் என்ற கலைஞர் ஒருவர் தான்!

இத்தகைய பீடிகைகளோடு சிவாஜி பற்றி எழுதுவதற்கு காரணம் உண்டு. சிவாஜியை இன்று வரை நடிகர் என்றும் கலைஞர் என்றும் கண்ட உலகம் அவர்தம் கலையுலகம் பற்றி பிரமாதமாக வியந்தும் பேசுகிறதே தவிர கருத்தியல் பூர்வமாக சினிமா மூலம் அவர் தம் சித்தாந்தமாக வெளியிட்ட சிந்தனையைக் கவனத்தில் கொள்ளவில்லை.


சிங்களத்தின் சிறந்த நடிகையான மாலினி பொன்சேகா, சிவாஜியோடு இணைந்து நடித்த பின் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்த போது: "சிவாஜிகணேசனுடன் நடிக்கும் போது அவருக்கு ஈடுகொடுத்து நடிக்கும் பக்குவம் அவர் மூலம் தானாகவே எனக்கு வந்து விடுகிறது அவர் நடிப்பை விட அவர் காண்பிக்கும் பாவங்களும், பாவனைகளும், உத்திகளும், விசாலமான பண்புமே உன்னதமானவை" என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார். இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பில் உருவான பைலட் பிரேம்நாத் படத்தில் சிவாஜியின் நாயகியாக நடித்து புகழ் பெற்ற ஒரே சிங்களமொழி நடிகை மாலினி பொன்சேகா ஆவார்.

இம்மாதிரியான அபிப்பிராயத்தையே நமது லண்டன் கலைஞர் பாலாவும் ஒத்துக்கொள்கிறார், இதுபோன்ற கலை மூலம் சிவாஜியின் கருத்தியற் கலையழகு வெளிப்பாடும் சிலேடையாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

அண்ணா கருணாநிதி ஆகியோரின் திமுக பாசறையிலிருந்து சிவாஜி பராசக்தி மூலம் சினிமா உலகில் கால்பதித்து பிரகாசமான போதும், சிவாஜியின் கருதுகோள் இனவாதத்துக்குள்ளோ அன்றேல் பிரிவினைவாதத்திற்குள்ளோ மூழ்கியது இல்லை. பார்ப்பனிய எதிர்ப்பினையே கையாண்டு இனவாதத்தின் மூலம் பிரிவினைவாதத்தின் பெயராலும் அரசு கட்டில் ஏறியது எனினும் இந்த கருத்தியல்களை எப்போதும் நிராகரித்ததோடு தன்னை ஒரு முழுமையான இந்தியனாகவும் தேசபக்தன் ஆகவும் காண்பித்தது தான் அவரது பெரிய சாதனையாகும்.

இதன்கண் அவர்தம் செயல் சிந்தனை கருத்தியல் யாவும் ஓர் இந்திய தேசத்தவர் ஆகவே செயற்பட்டன. அரசியல் துறையில் திமுகவுக்கு எதிரான கருத்தியல் கலை உலகப் போக்கில் இருந்து தன்னை முற்றாக விடுவித்தமை முக்கிய கவனத்திற்குரியது.

சிவாஜி தனி ஒரு கலைஞர் ஆகவே நின்று இந்தியாவை ஒருசர நோக்கும் கருத்தியலாளராக ஆக்கியதே சிவாஜியின் மற்றுமோர் சாதனையாகும்!



தமிழகத்தின் பாமரத்தனத்தை மூலதனம் ஆக்கிய திமுக மூலம் சிவாஜி கணேசன் கலையுலகில் கால்பதித்த போதும் அவர் அந்த குறுக்குவழி அரசியலை எப்போதும் நிராகரித்து வந்தார். என்பது அவர்தம் இன்னுமோர் சிறப்பு. இங்கே தான் சிவாஜி என்ற கலைஞனின் தீட்சணப் பார்வை புலப்படுகிறது.

எழுத்தாளர் மற்றும் சிந்தனையாளர் எஸ்.அகஸ்தியர் மிக ஆழமாக சிவாஜி அவர்களை ஆராய்ந்து கூறுகளை மேலே குறிப்பிட்டுள்ளேன்.

இனி சிவாஜி அவர்கள் ஒரு மானுட கலைஞன் என்றும் தேசிய கலைஞர் என்றும் போற்றப்படுவதற்கு அவர் ஆற்றிய பணிகள் அல்லது பாத்திரங்கள் வாயிலாக அவர் நாட்டு மக்களுக்கு சொல்லிய பாடங்கள் பற்றி சிந்திப்போம்! அடுத்து வரும் வாரங்களில் இதைப்பற்றி எழுதுவேன்...

நமது சிவாஜி அவர்கள் ஒரு பச்சை தமிழர். எங்களுக்கெல்லாம் உரையாடல் உச்சரிப்பு வாத்தியாரும் ஆவார். அடுத்து வரும் வீர வரிகளை உரத்துப் பேசி பாருங்கள் படத்தின் பெயர் நான் சொல்லத் தேவையில்லை உங்கள் ஊகத்திற்கே விட்டுவிடுகிறேன்.

"நீல வானிலே செந்நிறப் பிழம்பு! அந்த வட்ட ஒளியின் பெயர் சூரியன். சுட்டெரிக்கும் செஞ்சுடர் அது! அதுதான் நீ என் நெற்றியில் இட்ட இந்த வட்டமான ரத்தம் நிறை பொட்டு!

பரமனுக்கு முக்கண்! அது தேவையில்லை வீரனுக்கு இந்த வெற்றி வடு ஒன்றே போதும்! வாளை ஒட்ட! அவர்கள் மீது வேலை பாய்ச்ச.. அதனால் விளைவது என்ன என்று கேள்!

வெண்மணல் நிலமெல்லாம் செக்க வானம் போல் செம்பவள மலைபோல்..... செப்புத்தகடு அடித்து செப்பனிட்ட கரை போல் மாணிக்கக் கரைகட்டி மடைதிறந்த நெருப்பாற்றை மத்தியிலேயே ஓடவிட்ட அழகு போல் எதிரியின் ரத்தம் குபுகுபுவென கொப்பளித்து மேலெழும்பி என்றும் நிறைந்த பொருளாய் - நம் ஏற்றமிகு செயலாய் களத்தில் நிறைய போவது தான்! அதுதான் விளையப் போவது...! அது தானே உன்னாசை.. ஜக்கம்மா!

வசனம் சக்தி கிருஷ்ணசாமி.

அடுத்து வரும் தொடர்களில் இறுதியில் நடிகர் திலகம் உச்சரித்த வரிகளை குறிப்பிடுவேன், நீங்களும் உரக்கப் பேசி உச்சரித்து தமிழ்மொழியைக் கொண்டாடுங்கள்.

.

***- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்***

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING

பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்

Cash Point

துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.



Cash Point

3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

# அன்பின் தொனி - 570

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

### துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்

கர்த்தாவே, ஏன் தூரத்தில் நிற்கிறீர்? ஆபத்து நேரிடுகிற சமயங்களில் நீர் ஏன் மறைந்திருக்கிறீர்? துன்மார்க்கன் தன் பெருமையினால் சிறுமைப்பட்டவனைக் கடூரமாய்த் துன்பப்படுத்துகிறான், அவர்கள் நினைத்த சதிமோசங்களில் அவர் களே அகப்படுவார்கள். துன்மார்க்கன் தன் உள்ளம் இச்சித்ததைப் பெற்றதினால் பெருமை பாராட்டி, பொருளை அபகரித்துத் தன்னைத்தான் போற்றி, கர்த்தரை அசட்டைபண்ணுகிறான். துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான், அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே. அவன் வழிகள் எப்போதும் கேடுள்ளவைகள், உம்முடைய நியாயத்தீர்ப்புகள் அவன் பார்வைக்கு எட்டாமல் மிகவும் உயரமாயிருக்கிறது, தன் எதிராளிகளெல்லார் மேலும் சீறுகிறான். நான் அசைக்கப்படுவதில்லை, தலைமுறை தலைமுறைதோறும் தீங்கு என்னை அணுகுவதில்லை யென்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான். அவன் வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது, அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு. கிராமங்களின் ஒளிப்பிடங்களிலே பதிவிருந்து, மறைவிடங்களிலே குற்றமற்றவனைக் கொல்லுகிறான், திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக்கொண்டிருக் கிறது. தன் கெபியிலிருக்கிற சிங்கத்தைப்போல மறைவில் பதிவிருக்கிறான், ஏழையைப் பிடிக்கப் பதிவிருந்து, ஏழையைத் தன் வலைக்குள் இழுத்துப் பிடித்துக்கொள்ளுகிறான். திக்கற்றவர்கள் தன் பலவான்கள் கையில் விழும்படி அவன் பதுங்கிக் கிடக்கிறான். தேவன் அதை மறந்தார் என்றும், அவர் தம்முடைய முகத்தை மறைத்து, ஒருக்காலும் அதைக் காணமாட்டார் என்றும், தன் இருதயத்திலே சொல்லிக்கொள்ளுகிறான். கர்த்தாவே, எழுந்தருளும், தேவனே, உம்முடைய கையை உயர்த்தும், ஏழைகளை மறவாதேயும். துன்மார்க்கன் தேவனை அசட்டைபண்ணி: நீர் கேட்டு விசாரிப்ப தில்லை என்று தன் இருதயத்தில் சொல்லிக் கொள்வானேன்? அதைப் பார்த்திருக்கிறீரே! உபத்திரவத்தையும் குரோ தத்தையும் கவனித்திருக்கிறீரேஆ நீர் பதிலளிப்பீர், ஏழையானவன் தன்னை உமக்கு ஒப்புவிக்கிறான், திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர் நீரே. துன்மார்க்கனும் பொல்லாதவனுமாயிருக்கிறவனுடைய புயத்தை முறித்துவிடும், அவனு டைய ஆகாமியம் காணாமற்போகுமட்டும் அதைத் தேடி விசாரியும். கர்த்தர் சதாகாலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார், புறஜாதியார் அவருடைய தேசத்திலிருந்து அழிந்து போவார்கள். கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர், அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர். மண்ணான மனுஷன் இனிப் பலவந்தஞ்செய்யத் தொடராத படிக்கு, தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நீதிசெய்ய உம்முடைய செவிகளைச் சாய்த்துக் கேட்டருளுவீர். **- சங்கீதம் 10: 1-18**

### கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்

நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன், பின்னை ஏன் நீங்கள் என் ஆத்துமாவை நோக்கி: பட்சியைப்போல உன் மலைக்குப் பறந்துபோ என்று சொல்லுகிறீர்கள். இதோ, துன்மார்க்கர் வில்லைவளைத்து, செம்மையான இருதயத்தார்மேல் அந்த காரத்தில் எய்யும்படி தங்கள் அம்புகளை நாணிலே தொடுக்கிறார்கள். அஸ்திபாரங்களும் நிர்மூலமாகிறதே, நீதிமான் என்னசெய்வான்? கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார், கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது, அவருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது, அவருடைய இமைகள் அவர்களைச் சோதித்தறிகிறது. கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார், துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது. துன்மார்க்கர்மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார், அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்த ளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு. கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார், அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது. **- சங்கீதம் 11: 1-7**

### உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள்

இரட்சியும் கர்த்தாவே, பக்தியுள்ளவன் அற்றுப்போகிறான், உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள் அவரவர் தங்கள் தோழரோடே பொய்பேசுகிறார்கள், இச்சக உதடுகளால் இருமனதாய்ப் பேசுகிறார்கள்.. இச்சகம்பேசுகிற எல்லா உதடுகளையும், பெருமைகளைப் பேசுகிற நாவையும் கர்த்தர் அறுத்துப்போடுவார். அவர்கள்: எங்கள் நாவுகளால் மேற்கொள்ளுவோம், எங்கள் உதடுகள் எங்களுடையது, யார் எங்களுக்கு ஆண்டவன் என்று சொல்லுகிறார்கள். ஏழை கள் பாழாக்கப்பட்டதினிமித்தமும், எளியவர்கள் விடும் பெருமூச்சினிமித்தமும், நான் இப்பொழுது எழுந்து, அவன்மேல் சீறுகிறவர்களுக்கு அவனைக் காத்துச் சுகமாயிருக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய சொற் கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது. கர்த்தாவே, நீர் அவர்களைக் காப்பாற்றி, அவர்களை என்றைக்கும் இந்தச் சந்ததிக்கு விலக்கிக் காத்துக்கொள்ளுவீர். மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது, துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள். **- சங்கீதம் 12: 1-8**

### கர்த்தர் எனக்கு நன்மைசெய்தபடியால் அவரைப் பாடுவேன்

கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர், எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்? என் இருத யத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப் பேன்? எது வரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்? என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப் பார்த்து, எனக்குச் செவிகொடுத்தருளும், நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும். அவனை மேற்கொண்டேன் என்று என் பகைஞன் சொல்லாதபடிக்கும், நான் தள்ளாடுகிறதினால் என் சத்துருக்கள் களிகூராதபடிக்கும் இப்படிச் செய்தருளும். நான் உம்முடைய கிருபையின்மேல் நம்பிக்கையாயிருக்கிறேன், உம்முடைய இரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும். கர்த்தர் எனக்கு நன்மைசெய்தபடியால் அவரைப் பாடுவேன். **- சங்கீதம் 13: 1-6**

**தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள், நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை.**

*தொடரும்...*




# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
25 - 05 - 1935



இறைவன் அணைப்பில்:
23 - 07 - 2019

## திரு. சிவலிங்கம் இராமலிங்கம்

(உதயணன்)

### தோன்றிற் புகழொடு தோன்றுக...

ஆண்டொன்று என்ன ஆயிரமே ஆனாலும் எமக்கு
அழகாக நீவிர் அள்ளித் தந்த
அன்பும் அறிவும் அறுசீர் அமுதமும்
அகலாது நெஞ்சமதில் நிற்குதையா நிறைத்து

சிரிக்க சிரிக்க பேசி
சிந்திக்க நற்கதைகள் கூறி
சிறப்பொடு நற்கவிதைகள் காவியங்கள் தந்த
செம்மலே நின்னை சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்

மாண்புறவே எமை வாழவைத்து
மங்காப் புகழொடு விண்ணகம் விரைந்திட்ட
எங்கள் எந்தையே மலர்தூவிப்
பணிகின்றோம் நின்பாதக் கமலங்கள்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.
(416) 754-7356, (647) 351-8543

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
$50 மட்டுமே

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் சுடர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
PARK PLAZA
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1268 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday July 24, 2020

# கனடாவின் ஒன்றாரியோவில் உள்ள 72 கல்விச் சபைகளில் 50 வீதமானவற்றில் தலைமை அதிகாரிகளாக பெண்களே பணியாற்றுகின்றார்கள்



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் இயங்கிவரும் 72 கல்விச் சபைகளில் 50 வீதமானவற்றில் தலைமை அதிகாரிகளாக பெண்களே பணியாற்றுகின்றார்கள் என்ற விபரங்கள் அண்மையில் அரச மட்டத்திரலும் சமூக மட்டத்திலும் ஒரு பேசப்படும் விடயமாக உள்ளது. அத்துடன் மாகாணத்தின் அளவில் பெரியதும் அதிக எண்ணிக்கையுள்ள பாட-சாலைக் கொண்டவையுமான ரொரன்ரொ மற்றும் பீல் ஆகிய சபைகளின் தலைமைப் பொறுப்பை கொண்டுள்ள இயக்குனர்களாக கறுப்பினத்தைச் சேர்நத பெண் அதி-காரிகள் பணியாற்றுகின்றமை இன்னும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தியாகவே பார்க்கப்படுகின்றது.

அதுவும், கறுப்பினத்திற்கு எதிரான கருத்துக்களும் ஆர்ப்பாட்டங்களும் கனடாவிலும் அமெரிக்காவிலும் பரவி இருக்கின்ற இந்த நேரத்தில் இந்த விடயமான மதிக்கப்பட வேண்டியதொன்றாகவே பார்க்கப்படுகின்றது

மேலும், ரொரன்ரோவின் கல்விச் சபையின் இடைக்கால இயக்குனராக திருமதி கார்லின் ஜெக்சன் பதவியேற்ற செய்தியை எமது கனடா உதயன் அண்மையில் மிகுந்த மகிழ்ச்சியுடன் பிரசுரித்திருந்தது. இதைப் போன்றே, பீல் பிராந்திய கல்விச் சபைக்கு திருமதி கொலீன் ருசெல் மிக அண்மையில் பதவியேற்க உள்ளார் என்ற செய்தி எமக்கு கிட்டியுள்ளது. தலைமைப் பதவி வகிக்கும் மூன்றாவது கல்விச் சபையாக கனடாவின் தலைநகரமாகத் திகழும் ஒட்டாவா மாநகரிற்குள் அடங்கும் கால்ரன் கல்விச் சபையின் இயக்குனராக திருமதி வில்லியம் டெயிலர் என்னும் கறுப்பினப் பெண்மணி பதவியேற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, ரொரன்ரோ கல்விச் சபையின் தலைமைப் பொறுப்பை அண்மையில் ஏற்றுக் கொண்ட இயக்குனர் ஜெக்சன் அவர்கள் ஊடகவியலாளர்களோடு நடத்திய சந்திப்பின்போது "நாங்கள் மாற்றங்கள் நிகழுகின்ற ஒரு காலப்பகுதிக்கு வந்துள்ளோம். எமது கல்விச் சபைகள் இவற்றை எங்களுக்குக் காட்டுகின்றன. இந்த வகையான சாதனை-களை நாங்கள் நிச்சயம் கொண்டாட வேண்டும். கறுப்பினத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நாம் மூவர் இந்த உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டமை, ஒரு நற்காரியம் ஆகும்" என்றார்

பீல் பிராந்திய கல்விச் சபையின் இயக்குனர் திருமதி ருசெல் கருத்துத் தெரிவிக்கையில் " ஊடகவியலாளர்களான நீங்கள் எழுதிக் கொண்டிருக்கின்ற இன்றைய செய்திகள் மாற்றம் பெற்று,எதிர்காலத்தில் எமது கறுப்பினப் பெண்களைப் போன்று, இந்நாட்டின் பழங்குடியினரின் வம்சாவழிகள் மற்றும் இஸ்லாமியர்கள் என அனைத்து சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் இவ்வாறான பதவிகளை அலங்கரிக்கின்றார்கள் என்ற செய்திகளையும் எதிர்காலத்தில் எழுத வேண்டிவரும் " என்று மகிழ்ச்சியோடு கூறினார்.

கறுப்பினப் பெண்மணிகளால் நிர்வகிக்கப்படும் ஒட்டாவா, ரொரன்ரோ மற்றும் பீல் ஆகிய மூன்று பிராந்திய கல்விச் சபைகளுக்கு கீழ் உள்ள பாடசாலைகளில் சுமார் நாலரை இலட்சத்திற்கு அதி-கமான மாணவ மாணவிகள் கல்வி கற்று வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பல்லின சமூகங்கள் சேர்ந்து வாழும் இந்த கனடாவில் பல்லினங்களைச் சேர்ந்த கல்வியாளர்கள் கல்விச் சபைகளில் உள்ள உயர் பதவிகளை அலங்கரிப்பது முற்றிலும் பாராட்டுக்குரியது என்று ஒட்டாவாவில் உள்ள பாடசாலை ஒன்றில் இயங்கிவரும் பெற்றோர் சங்கத்தின் முக்கிய பிரமுகர் ஒருவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகை மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.

இவ்வாறு, கறுப்பினப் பெண்கள் கல்விச் சபைகளின் தலைமைப் பதவிகளை அலங்கரிப்பது என்பது மிகுந்த பாராட்டுக்குரிய விடயமாகும் என்று குறிப்பிட்டுள்ள ரொரன்ரொ கல்விச்சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக பணியாற்றும் தமிழரான திரு பார்த்தி கந்தவேள் பத்திரிகையாளர்களோடு கருத்துக்களைப் பரிமாறுகையில் இந்த பெண்மணிகளோடு பணியாற்றும் சந்தர்ப்பங்களைப் பெற்ற நான் அவர்களது ஆற்றலையும் மனித நேயத்தையும் நிர்வாகத் திறமையை நன்கு அவதானித்தவன்" என்றார்.



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ்

நடைபெறவுள்ள 2020 இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ் அவர்களுக்கு வாக்களிக்கும்படி கனடாவில் வாழும் சட்டத்தரணியும் மறைந்த ரவிராஜ் அவர்களின் சகோதரியுமான வாசுகி தேவதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். சசிகலா ரவிராஜ் அவர்களுடைய சின்னம்- வீடு: இலக்கம் -3 ஆகும்.

தனது மைத்துனியும், சுட்டுக்கொல்லப்பட்ட சட்டத்தரணி ரவிராஜ் அவர்களின் துணைவியாருமான வேட்பாளர் சசிகலா இரவிராஜ் அவர்களுக்கு அனைவரும் ஆதரவை வழங்குமாறு கனடாவில் வாழும் அன்பர்களைக் கேட்டுக் கொள்ளும் சட்டத்தரணி வாசுகி தேவதாஸ், தாயகத்தில் உள்ள தங்கள் உறவினர்களோடு தமது வேண்டுகோளைப் பகிர்ந்து கொள்ளுமாறு இந்தச் செய்தியின் ஊடாக வேண்டுகின்றார். (விபரமான விளம்பரம் உள்ளே காணப்படுகின்றது)

# மொன்றியால் அருள்மிகு திருமுருகன் கோயில் 25வது வருட வெள்ளிவிழா ஆண்டு உற்சவம்



மொன்றியால் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு திருமுருகன் கோயில் 25 வருட வெள்ளிவிழா ஆண்டு மஹோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஆரம்பமாகவுள்ளது. இவ்வாண்டிற்குரிய சிறப்பு வெள்ளிவிழா மஹோற்சவம் பதினைந்து நாட்களும் விசேட ஏற்பாடுகளுடன் நடைபெற ஆலய நிர்வாக சபையினர் ஒழுங்குகளைச் செய்துள்ளனர். வருடாந்த மஹோற்வசம் ஆரம்பமாகி, தொடர்ந்து திருவிழா உபயகாரர்களாக விளங்கும் ஒன்பது குடும்பத்தவர்களுக்கு வெள்ளி விழா கௌரவம் இவ்வருடம் அளிக்கப்பெறும் எனவும் ஆலய நிர்வாக சபையினர் அறியத்தந்துள்ளனர்.

மொ மான்றியால் மாநகரின் கோவிட்-19 தடுப்பு விதிமுறைகளைப் பின்பற்றி பக்தர்களும் பொதுமக்களும் எதையும் மீறாமல் வருடாந்த மஹோற்சவம் தடையேதும் இன்றி நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறும் கியுபெக் சைவ மகாசபையினரும், திருவிழா உபயகாரர்களும் பணிவாகக் கேட்டுகின்றார்கள்- ஆலய தொலைபேசி இலக்கம்:- 1 514 683 8044

*மொன்றியாலிலிருந்து சண்முகராஜா*